மலர் – 1 இதழ் – 5

# தமிழக மக்கள் இறையாண்மை

தனிச்சுற்றுக்கு மட்டும்
நன்கொடை ரூ.30

தி.பி. 2054 மேழம் (சித்திரை) 2023 ஏப்ரல் – மே




# கொலை + கொள்ளை = மோடி



2022 டிசம்பர் 18-ஆம் நாள் ஏகலைவன் இதழ் ஆசிரியர் ஏம்பல் ராஜா மருத்துவ அதிகாரியாக பதவி உயர்வு பெற்றார். அவரது பாராட்டு விழா அறந்தாங்கியில் நடைபெற்றது. அதில் தமிழ் தேச இறையாண்மை [த.தே.இ.] சார்பில் செயலாளர் தோழர் பாரி.



2023 மார்ச் 20-ஆம் நாள் பழனியம்மாள் என்ற நித்யா படுகொலை வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி உத்தரவிட கோரி புதுக்கோட்டையில் நீதிக்கான தலித் மக்கள் கூட்டடைப்பு நடத்திய ஆர்ப்பாட்டத்தில் த.தே.இ. பங்கேற்றது.






2023 ஜனவரி 7-ஆம் நாள் செங்கிப்பட்டியில் நடைப்பெற்ற பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணியின் பொதுக்குழுக் கூட்டத்திலும், பா.எ.ம.மு. கொள்ளை விளக்கக் கூட்டத்திலும் த.தே.இ. பங்கேற்றது.

மலர் 1 இதழ் 5



சாதி ஒழிப்போம் !
தமிழரை இணைப்போம் !
தமிழ்த் தேச
இறையாண்மை
மீட்போம் !

ஆசிரியர்
**திருமொழி**

தொடர்பு முகவரி:
243/1 பெரியார் நகர்,
காட்டுநாவல்,
கந்தர்வக்கோட்டை அஞ்சல்,
புதுக்கோட்டை(மாவட்டம்)
அ.கு.எண் - 613301

தொடர்பு எண்கள்:
**76674 43935**
**99431 14128**

# மோடியின் ஒற்றன் ஆளுநர் ஆர்.என்.ரவி

உடனடியாகத் தமிழ்நாட்டை விட்டுத் துரத்தி அடிக்கப்பட வேண்டியவர் ஆளுநர் ஆர்.என்.ரவி. மக்களால் தேர்வு செய்யப்பட்ட சட்டமன்ற முடிவுகள் ஆளுநரின் ஒப்புதலுக்காக காத்திருக்க வேண்டும். ஆளுநர் ஏற்றுக் கெண்டால்தான் ஒவ்வொரு முடிவும் சட்டமாகும். ஆளுநர் எத்தனை நாட்களுக்குள் அரசின் முடிவுகளுக்குத் தன் கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்ற வரையறை ஏதும் இல்லை. அரசின் கருத்துக்களை, முடிவுகளை ஆளுநர் தன் விருப்பப்படி இழுத்தடிக்கலாம். ஆளுநரின் இழுத்தடிப்பிலிருந்து தப்பிக்கும் உரிமை தமிழக அரசுக்கு இருக்கிறது. ஆளுநருக்கு மீண்டும் முடிவுகளை அனுப்பி அவர் பதிலளிக்கவில்லை என்றாலும் அரசு அம்முடிவை நடைமுறைப் படுத்தச் சட்டம் அனுமதிக்கிறது. தமிழக அரசு தற்போது இந்த நிகழ்வை நோக்கி நகர்கிறது. மாநில அரசுகளை பொருத்தவரை ஆளுநர் என்ற பதவி தேவையற்ற ஒன்று. இதன் காரணமாகத்தான் அண்ணா “ஆட்டுக்குத் தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் தேவையில்லை” என்றார்.

நடுவண் அரசுக்கு மாநில அரசுகளைக் கண் காணிக்கவும் கண்டிப்பதற்கும் கலைக்கவும் ஆளுநர் அவசிய மானவராக இருக்கிறார். நடுவண் அரசு வல்லாதிக்கம் செய்ய தேவையான ஒரு நபராகவே ஆளுநர் செயல்படுவார், செயல்படுகிறார். தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவி நடுவண் அரசின் செயல் பாடுகளில் இருந்தவர். மோடி காலத்திலேயே நாகலாந்து பிரச்சனையில கலந்துகொண்டார். குறிப்பாக நாகலாந்து விடுதலைக் கட்சிகளைத் தேர்தலில் பங்கேற்க செய்யும் அரசின் முயற்சியில் ஈடுபட்டவர் இவர். தேர்தல் பாதையில் செயல்பட்ட கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. அந்த ஆட்சியின் போது இவர் ஆளுநராக பொறுப்பு ஏற்றார். இவரின் அதிகாரத் திமிரை ஏற்க மறுத்துப் போரிட்டது மக்கள் கட்சியும், காங்கிரசும். குறிப்பாக விரிவான மாணவர் போராட்டம் பொறுப் பிலிருந்து இவரை வெளி யேற்றியது. அதன் பிறகு இவர் தமிழ்நாட்டிற்கு ஆளுநர் பொறுப்பு ஏற்றார். மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஆட்சிக்கு எதிராக இருப்பது இவரது இயல்பு. அதிகாரத் திமிரே இவரின் அடிப்படை குணம் என்பதை தமிழக மக்கள் அறிந்து கொண்டனர். விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு தொடக்கம் முதலே இவருக்கு எதிராகப் போராடி

வருகிறது. திமுகவின் கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் ஆளுநர் தமிழ் நாட்டிலிருந்து உடனடியாக நீக்கப்பட வேண்டும் எனப் போராடி வருகின்றன. திமுகவும் தனது கட்சி சார்பாக ஆளுநர் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தி வருகிறது.

ஆளுநரின் இந்தியக் கொள்கை பார்ப்பனியக் கொள்கை. தேசிய இனங்களை ஏற்காத, அங்கீ கரிக்காதப் பார்ப்பனக் கொள்கை அவரது இயல்பான கொள்கையாகும். தமிழ்நாடு என்ற சொல்லே அவரை அச்சுறுத்துகிறது.

ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்நாடு என்ற சொல்லாடலையே மறுக்கிறார், வெறுக்கிறார். தமிழகம் என்றே பயன்படுத்துகிறார், இரண்டாயிரம் ஆண்டுக்கு மேலான வரலாறு கொண்டது தமிழ்நாடு என்ற சொல்லாடல். சிலப்பதிகாரம் தமிழ்நாடு என்ற பெயரையும் எல்லையையும் வரையறுத்திக் கூறியது. மொழிப்பற்றும் இனப்பற்றும் இல்லாத, பார்ப்பனப் பற்றும் சமக்கிருதப்பற்றும் மனு ஸ்மிருதி பற்றும் மட்டுமே கொண்ட ஆளுநர் இந்திய தேசிய வாதியாக இருக்கிறார். தமிழ்நாடு பிரிட்டிஷ் ஆட்சியில் சென்னை மாகாணம் மெட்ராஸ் ஸ்டேட் என்றே அழைக்கப்பட்டது. தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்படவேண்டும் என்று காங்கிரஸில் பொறுப்பில் இருந்த சங்கரலிங்கனார் 79 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து வீரமரணம் அடைந்தார். தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ய காங்கிரஸ் எதிர்த்தது. காங்கிரஸ் தலைவராக இருந்த காமராஜரும் எம்.பக்தவச்சலமும் தமிழ்நாடு பெயரை ஏற்க மறுத்தனர். இந்திய கொள்கையில் மூழ்கிக் கிடந்தனர்.

1962 மார்ச் மாதத்தில் கம்யூனிஸ்ட் கட்சியால் தமிழ்நாடு கோரிக்கை பாராளுமன்றம் கொண்டு செல்லப்பட்டது. கோரிக்கை தோற்கடிக்கப்பட்டது. தி.மு.க ஆட்சியைக் கைப்பறிய பிறகு அண்ணா அவர்களால் 1968–ஜுன் 18ல் தமிழ்நாடு பெயர் சட்டப்பூர்வமாக மாற்றப்பட்டது. நவம்பர் 23, 1968–ல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 1964 ஜனவரியில் சென்னை சட்டமன்றத்திலும் தமிழ்நாடு கோரிக்கை தோற்கடிக்கப்பட்டது. எத்தனை போராட்டங்களிலினால் தமிழ்நாடு உருவாக்கப்பட்டது என்பதை அறியமாட்டார் ஆளுநர் ஆர்.என்.ரவி. எத்தனை உயிர் தியாகங்கள் என்பதையும் அறியமாட்டார்.

தமிழ்நாடு என்ற பெயரை கைவிட முயலும் ஆளுநர் ஆர். என். ரவி கட்டாயம் தமிழ்நாட்டிலிருந்து விரட்டி அடிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டிலிருந்து ஆளுநர் ஏன் விரட்டி அடிக்கப்பட வேண்டும் என்பதற்கு முக்கிய காரணம் ஆளுநர் தமிழ்நாடு என்ற பெயரை



மறுக்கிறார் என்பது மட்டுமல்ல. சமக்கிருதத்தையும் மனு ஸ்ருமிதியையும் உயர்த்தி பிடிப்பதையே அவரது முதன்மையான தொழிலாக கொண்டு செயல் படுகிறார். தி.மு.க.வுக்கு, எதிரான பிரச்சார கராகவும், தமிழ்நாடு அரசு ஏற்படுத்த முயலும் கொள்கை களை உடனடியாக நிறைவேற்ற தடை விதிப் பவராகவும் இருப்பது முக்கியமான காரணங்களாகும்.

ஆளுநர் என்ற பதவி நாடு முழுவதும் அனைத்து மாநிலங்களில் இருந்தும் நீக்கப்பட வேண்டும். நாட்டில் கட்டாயப் படுத்தப்பட்டு இணைக்கப் பட்ட மாநிலங்களும், மாநில உரிமைகள் கோரிக் கொண்டிருக்கும் மாநிலங்களும், அனைத்து உரிமைகளும் மாநிலங்கள் சார்ந்ததே என்று கூறும் இயக்கங்களும், தனிநாட்டு உரிமைகளை முன் வைத்தும் செயல்படும் இயக்கங்களும் இந்தியத் தால் ஒடுக்கப்படுகின்றனர். ஆளுநர் என்ற பதவியே தேசிய இன உரிமைகளை முற்றாக மறுப்பதற்கான அமைப்புதான். இந்திய அரசின் அதிகாரபூர்வமான ஒற்றன் ஆளுநர். எனவே ஆளுநர் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களில் இருந்தும் நீக்கப்பட வேண்டும். உலகத்தில் பெரும் பாலான நாடுகளை கைப்பற்றிய இங்கிலாந்திற்கு நாடுகளை அடக்கவும் ஒடுக்கவும், கண்காணிக்கவும் ஆளுநர் தேவைப் பட்டார். உலகு எங்கும் நடைபெற்ற மக்கள் போராட்டங்கள் இங்கிலாந்தைப் பணியச் செய்தது. இங்கிலாந்தின் ஆளுநர்கள் இங்கிலாந் தோடு விரட்டப்பட்டனர். ஆனால் அதிகாரம் பெற்ற இந்தியா தேசிய இனங்களைக் கண்காணிக்கவும், ஒடுக்கவும் ஆளுனரை தூக்கிப் பிடிக்கிறது. தேசிய இனங்களின் விடுதலையும் ஒற்றுமையும் வரலாற்றில் தவிர்க்க முடியாதது. ஆளுநர் அப்போது விரட்டப்படுவதும் வரலாற்றில் தவிர்க்க முடியாதது.

# ஒட்டி வளரும் கொள்ளைக் கூட்டாளிகள் அதானி மோதி!

– தியாகு

கடந்த 1925 முதல் 1934ஆம் ஆண்டு இறந்து போகும் வரை ஜெர்மனியின் அதிபராகப் பதவி வகித்தவர் ஃபீல்டு மார்சல் பால் ஃபோன் இண்டன்பர்க். இவரது பெயர் தாங்கிய ஒரு வானூர்தி 1937 மே 6ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் புது ஜெர்சியில் மான்செஸ்டர் நகரியத்தில் கொடுநேர்ச்சிக்கு உள்ளானதில் 35 பேர் உயிரிழந்தனர். அந்தக் காலத்தில் பெரும் அதிர்ச்சிக்கும் பரபரப்புக்கும் காரணமாய் அமைந்த இந்த நேர்ச்சியின் பெயரைப் பங்கு வணிக ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று தனக்குச் சூடிக் கொண்டது.

இண்டன்பர்க் எனும் இந்த அமெரிக்கப் பங்கு வணிக ஆராய்ச்சி நிறுவனம்தான் அண்மையில் இந்தியப் பன்னாட்டுப் பெருங்குழுமமான அதானி குழுமத்தின் மோசடிகளை ஆய்வு செய்து சனவரி 24ஆம் நாள் அறிக்கை வெளியிட்டு இந்திய அரசியலில் புயல் வீசச் செய்துள்ளது.

இந்தியத் தலைமையமைச்சர் நரேந்திர மோதிக்கும் கௌதம் அதானிக்குமான நெருக்கம் சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றில்லை.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் இடர்ப்படாதவர்கள் யாருமில்லை. அது உடலியல் நலவாழ்வுக்கு மட்டுமல்ல, அனைவரின் பொருளியல் நிலைக்கும் பேரிடியாக விழுந்தது. நாடே முடங்கிப் போயிற்று. ஆலைகள், அலுவலகங்கள் மூடப்பெற்றன. புலம்பெயர் உழைப்பாளர்கள் பசி பட்டினியோடு நூற்றுக் கணக்கான கிலோமீட்டர் கால்கடுக்க நடக்க வேண்டிய அவலம் ஏற்பட்டது. ஏற்கெனவே சுணக்கம் கண்ட நாட்டுப் பொருளியல் மேலும் வீழ்ச்சி கண்டது. இத்தனைக்கும் நடுவில் மிகச் சில பெருமுதலாளர்கள் மட்டும் வளர்ந்து கொண்டே இருந்தனர். அவர்களில் முதலிடம் பிடித்தவர் கௌதம் அதானி. அவர் தலைமையிலான அதானி குழுமம் மட்டும் முதல்பெருக்கிய வண்ணம் இருந்தது. அதானி உலகச் செல்வந்தர்கள் வரிசையில் மேலே மேலே ஏறிய வண்ணம் இருந்தார்.

பொருளியல் வல்லுநர்களுக்கே இது புரியாப் புதிராகத்தான் இருந்தது. இந்தப் புதிரை விடுவித்து விட்டது இண்டன்பர்க் ஆராய்ச்சி அறிக்கை. அதானியின் வளர்ச்சிக்கு இயல்பான தொழில்வணிக நடவடிக்கைகள் காரணமில்லை. ஏமாற்று மோசடிகளே அடிப்படை என்பதை இண்டன்பர்க் அறிக்கை உலகறியச் செய்து விட்டது. ஆட்சியாளர்களின் துணையில்லாமல் அதானி குழுமம் இவ்வளவு பெரிய மோசடிகளை நிகழ்த்தியிருக்க முடியாது. பொய்க் கணக்கு, போலி நிறுவனங்கள், பங்கு வணிகச் சூதாட்டம் என்று அதானி குழுமம் நடத்தியுள்ள மோசடிகளை உரிய சான்றுகளோடு இண்டன்பர்க் அம்பலமாக்கி விட்டது. அதானி குழுமப் பங்குகளில் முதலீடு செய்தவர்கள் உடனே தங்கள் பணத்தை விலக்கிக் கொண்டனர்.

புதிதாக அந்தப் பங்குகளை வாங்கு




வாரில்லை என்ற நிலை தோன்றியது. அதானி குழுமம் சடசடவென்று சரிந்து வீழ்ந்தது. இண்டன்பர்க் குற்றச்சாட்டுகளுக்கு அதானி குழுமம் தந்த ஒற்றை விடை என்ன தெரியுமா? இது இந்தியாவின் மீதான தாக்குதல் என்பதே. மோதி 'சௌக்கிதார்' ஆயிற்றே? இந்தியாவைக் காக்காமல் விடுவாரா? அதானியைக் காப்பாற்ற எல்லாத் தந்திரங்களையும் கையாண்டு வருகிறது அவரது ஆட்சி. பங்குச் சந்தையை ஒழுங்குபடுத்த வேண்டிய இந்தியப் பங்குப் பரிமாற்ற வாரியம் (செபி) போன்ற அமைப்புகள் அதானி குழும மோசடிகளைத் தெரிந்தே அனுமதித்துள்ளன. இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 420 மோசடிக் குற்றத்துக்குரியது. அதானி செய்திருக்கும் குற்றம் இதற்குக் குறைவில்லாத ஒன்று. இதற்காக அவரைத் தளைப்படுத்திச் சிறையில் அடைத்திருக்க வேண்டும்.

ஆனால் அதானி பழைய மோசடிகளுக்கு மேல் புதிய மோசடிகளைச் செய்து வருகிறார். நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் தலைவர் இராகுல் காந்தியும் திரிணாமூல் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்து மொய்வா மொய்த்ராவும் மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அதானி குழுமத்தின் மீதும் ஆட்சி மீதும் நேராக மோதி மீதும் சாற்றிய குற்றங்களுக்கு ஆளும் கட்சியின் தரப்பிலிருந்து விடையே இல்லை. நீதி விசாரணையோ நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் விசாரணையோ நடத்த மறுத்து மோதி ஆட்சி அழிச்சாட்டியம் செய்து வருகிறது. இதனால் நாடாளுமன்ற நடவடிக்கைகள் முடங்கிக் கிடக்கின்றன.

இந்தியக் குடியாட்சியம் எப்படி இயங்குகிறது என்பது பற்றி இராகுல் காந்தி இலண்டனில் பேசி விட்டாராம்! அதற்காக அவர் மன்னிப்புக் கேட்க வேண்டுமாம்! அதானி தொடர்பான குற்றச்சாட்டுக்கு பாசக கண்டு பிடித்துள்ள எதிர்க் குற்றச்சாட்டு இவ்வளவு தான்! மோதிக்கும் அதானிக்குமான இந்த இணை பிரியாக் கூட்டு ஒட்டுமுதலியம் (CRONY CAPITALISM) என்பதற்கு மிகச் சிறந்த (படுமோசமான) எடுத்துக்காட்டாகும்.

முதலாளரும் அரசியலாரும் நேராகவே ஒருவரையொருவர் காப்பாற்றி வளர்த்து விடுவதுதான் இந்த முதலியத்தின் சாறம். மோதி குசாராத் முதலமைச்சராக இருந்த போது அதானியை வளர்த்து விட்டார். மோதியின் அரசியல் வெற்றிகளுக்கு அதானி அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். "குசராத் மாடல்" வளர்ச்சி என்பதன் அச்சாணியே இந்த ஒட்டுறவுதான். யாரைக் கொண்டு யார் பயனடைந்தார் என்று பிரித்துப் பார்க்கவே முடியாது. தொன்னைக்கு நெய் ஆதாரமா? நெய்க்குத் தொன்னை ஆதாரமா? கடந்த 2014ஆம் ஆண்டு மோதி நாட்டின் தலைமையமைச்சரான பிறகு இந்த ஒட்டுறவு தில்லியில் மையங்கொண்டது.

உலகெங்கும் சுற்றிச் சுற்றி அதானிக்குப் புதிய இலாப வேட்டைக் களங்களை அமைத்துக் கொடுத்தார் மோதி! அனைவருக்கும் வளர்ச்சி அனைவரோடும் சேர்ந்து (சப்கா விகாஸ் சப்கே சாத்) என்ற முழக்கத்தின் மெய்ப்பொருள் இருவருக்கும் வளர்ச்சி இருவரும் சேர்ந்தே என்பது தெளிவாயிற்று. மோதி–அமித்சா கும்பலின் உதவி இல்லாமல் அதானியால் இந்த அளவுக்கு வளர்ந்திருக்க முடியாது. அதானியும்





2023 மார்ச் 25-இல் பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணி அதில் இடம் பெற்றுள்ள அமைப்புகளின் முற்றுகைப் போராட்டம். பங்குச் சந்தை குற்றவாளி அதானியின் கூட்டாளி மோடியே பதவி விலகு! அதானி குழுமத்தின் சொத்துக்களைப் பறிமுதல் செய்! மக்கள் பணத்தைக் கொள்ளையடித்த அதானியைக் கைது செய்! அதானி குழுமத்துடன் போட்டுள்ள மக்கள் பகை ஒப்பந்தங்களை தி.மு.க. அரசே திரும்பப் பெறு! சென்னையில் நடைபெற்ற போராட்டத்தில் ஈடுபட்டோர் கைது செய்யப்பட்டு மண்டபத்தில் வைக்கப்பட்டனர். தமிழ்த் தேச இறையாண்மையின் (த.தே.இ.) சார்பில் செயலாளர் தோழர் பாரி, பொருளாளர் தோழர் கரு.மாரியப்பன், சென்னை மண்டலக் குழு உறுப்பினர் தோழர் ஸ்ரீதர் ஆகியோர் கலந்துக் கொண்டனர். இப்போராட்டம் மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம் வழக்கறிஞர் சேல் முருகன் தலைமையில் நடைபெற்றது.

அவர்களுக்கு வள்ளலாகவே வாரிக் கொடுத்துள்ளார்.

கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவை யில்லை! அதானியின் பொருளியல் பேரரசும் மோதியின் அரசியல் வல்லரசும் ஒன்றுக் கொன்று இணையாகவும் துணையாகவுமே வளர்ந் துள்ளன. இரண்டும் இந்துத்துவ வண்டி ஓடும் இரட்டைத் தளவாடங்களாக உள்ளன. ஆழ்ந்து நோக்கினால் குசராத்தில் இசுலாமியர் இனப் படுகொலைக்கும் மோதி–அதானி ஒட்டு வளர்ச்சிக் குமான நெருங்கிய தொடர்பைப் புரிந்து கொள்ளலாம். இந்தியாவில் குடியாட்சிய நிறுவனங்கள் பாசிசத்தின் கொடிய பிடியில் சிக்கிக் கொள்ளும் போக்கு வளர்ந்து வரும் நிலையில், குசராத் 2002 இனக் கொலையை அம்பலமாக்க பிரித்தானிய பிபிசியும், அதானியின் மோசடியை அம்பலமாக்க அமெரிக்க இண்டன்பர்க்கும் தேவைப் பட்டிருப்பதில் வியப்பில்லை.

பன்னாட்டளவில் வலுவுடன் மிரட்டிக் கொண்டிருக்கும் மோதி அதானியை முறியடிக்க நாமும் பன்னாட்டளவில் குடியாட்சிய ஆற்றல்களின் ஆதரவைத் திரட்டியாக வேண்டும். மோதி – அதானி கும்பலைப் பன்னாட்டளவிலும் இந்திய அளவிலும் முறியடிக்க வேண்டும். அதற்குத் தமிழகத்தை எடுத்துக் காட்டாக மாற்ற வேண்டும். தமிழகத்தில் அதானியுடன் செய்துள்ள உடன்படிக்கைகளை திமுக அரசு கிழித்தெறிய வேண்டும்.

எல்லாத் தளங்களிலும் எல்லா முனை களிலும் மோதி–அதானி கும்பலை முறியடிப்பதே குடியாட்சியமும் சமூக நீதியும் சமயச் சார்பின்மையும் காக்கும் வழி. இந்திய அரசே! அதானி குழுமத்தின் சொத்து களைப் பறிமுதல் செய்!

மக்கள் பணத்தைக் கொள்ளையடித்த அதானியைக் கைது செய்!

தமிழக திமுக அரசே!

அதானி குழுமத்துடன் போட்டுக் கொண்ட மக்கள் விரோத ஒப்பந்தங்களக் கிழித்துப் போடு!

# பிபிசி ஆவணப்படம்

– கோகுல் பிரசாத்

பிபிசி ஆவணப்படத்தின் முதல் பகுதியைப் பார்த்தேன். குஜராத் கலவரம் குறித்து நமக்கு ஏற்கெனவே நன்கு பரிச்சயமான தகவல்களைச் சீரான முறையில் தக்க சான்றுகளுடன் விவரிக்கிறது. இசுலாமியப் படுகொலைகள் நிகழ்ந்து இருபதாண்டுகளுக்குப் பிறகு வெளியாகியுள்ள இந்த ஆவணப்படத்தின் பயன் அதிலுள்ள பதற்றமான உண்மையின் குரலே. காலம் கடந்தும் அது நம்மை உலுக்கத் தவறுவதில்லை. குற்றங்களின் கல்லறை களிலிருந்து எப்போது வேண்டுமானாலும் பூதங்கள் எழும், அவை நிரந்தரமாக உறங்குவ தில்லை என்பதற்கான சான்று இப்படம். இவ்வழக்கின் நான்கு முக்கியமான சாட்சிகளைக் குறித்துப் படத்தில் காட்டுகிறார்கள். முதலாமவர், இம்தியாஸ். கலவரத்தின்போது காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், ஈஷான் ஜாப்ரி வீட்டில் உயிருக்கு அஞ்சித் தஞ்சமடைந்தவர். இம்தியாஸைப் போலவே நூறு பேர் ஜாப்ரி வீட்டில் ஒடுங்கியிருக்கிறார்கள். கலவரக்காரர்கள் எந்நேரமும் தன் வீட்டைச் சூழ்ந்து தாக்கலாம் எனும் பயத்தில் தன் அரசியல் அதிகாரத் தொடர்புகளைத் தொலைபேசி வாயிலாக ஜாப்ரி உதவிக்கு அழைக்கிறார், மன்றாடுகிறார். இதில் காங்கிரஸ் காரர்களும் பிஜேபி ஆள்களும் அடக்கம். யாருமே காப்பாற்ற முன்வருவதில்லை. கடைசியில், வேறு வழியின்றி நரேந்திர மோதியையே நேரடியாகத் தொடர்பு கொள்கிறார். அவர் ஜாப்ரியைக் கடுமையாகத் தூற்றியும் சாபமிட்டும் அழைப்பைத் துண்டிக் கிறார். இவர்கள் இடையேயான தொலைபேசி உரையாடலுக்குச் சாட்சியாக இருந்தவர் இம்தியாஸ். ஆனால், வழக்காடு மன்றத்தில் இம்தியாஸின் வாக்குமூலம் நிராகரிக்கப்படுகிறது. அப்படியொரு தொலைபேசி அழைப்பு மேற்கொள்ளப்பட்டதற்கான போதிய ஆதாரம் இல்லை எனக் கைவிரித்துவிடுகிறார்கள். முதலில் ஜாப்ரிதான் தன் துப்பாக்கியைக் காட்டி இந்துக்களை மிரட்டியதாகவும் அவர்களைத் தூண்டிவிட்டு கலவரத்துக்குக் காரணமான தாகவும் வழக்கு திரிக்கப்படுகிறது. இரண்டாமவர், குஜராத்தின் முன்னாள் உள்துறை அமைச்சர் ஹரேன் பாண்டியா. கலவரம் மூண்ட நாளன்று ஓர் அவசரச் சந்திப்பை மோதி ஏற்பாடு செய்ததாகவும் அதில் இசுலாமிய வீடுகள் சூறையாடப்படும்போதோ இசுலாமியர்கள் கொல்லப்படும்போதோ பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாகும்போதோ காவல் துறையினர் தலையிடக்கூடாது என மோதி உத்தர விட்டதாகவும் பாண்டியா தெரிவிக்கிறார். மூன்று நாட்களுக்குப் பிறகு அக்கலவரத்தைக் காவல்துறையினர் கட்டுப்படுத்தினால் போதும் என்கிற வாய்மொழி ஆணையும் இடப்படுகிறது. இதனைக் குற்ற விசாரணைக்கான தீர்ப்பாயத்தின் முன் சாட்சியளிப்பதற்குப் பாண்டியா தயாராகிறார். ஆனால், மோதி ஏற்பாடு செய்த சந்திப்பில் பாண்டியா கலந்துகொள்ளவே இல்லை என்று பிற அமைச்சர்களும் காவல்துறை உயரதிகாரிகளும் பாண்டியாவுக்கு எதிராக வாக்குமூலம் அளிக்கின்றனர். சில நாட்களுக்குப் பிறகு மர்மமான முறையில் ஹரேன் பாண்டியா கொல்லப்படுகிறார். கூலிப்படையை ஏவி பாண்டியாவைக் கொன்ற வழக்கில் பன்னிரண்டு பேர் கைதாகின்றனர். கீழ் நீதிமன்றத்தில் அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. மேல்முறையீட்டில் அத்தீர்ப்பு ரத்தாகிறது. மூன்றாவது சாட்சி காவல்துறை அதிகாரி சஞ்சய் பட். இவரும் பாண்டியாவின் கூற்றை உறுதிசெய்கிறார். ஆனால், வழக்கம்போல, எதிர்தரப்பைப் பொறுத்தவரை அந்தச் சந்திப்பில் சஞ்சய் கலந்துகொள்ளவில்லை. பொய்ச் சான்றுகளைச் சமர்ப்பித்ததற்காகச் சஞ்சய் மீதே வழக்கு போடப்படுகிறது. முப்பதாண்டுகளுக்கு முன் ஒரு கைதியை விசாரிக்கும்போது வன்முறையைப் பிரயோகித்து அவனைக் காவற்கூடத்தில் கொன்றதாகப் புதிய வழக்கு




பதியப்பட்டு சஞ்சய்க்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது. இத்தீர்ப்பை எதிர்த்து 'சஞ்சய் நிரபராதி' என அவரது மகள் இன்னமும் போராடி வருகிறார். நான்காமவர், குஜராத் காவல்துறை தலைமைப் பொறுப்பிலிருந்த ஆர்.பி.ஸ்ரீகுமார். ஜாப்ரியின் விதவை மனைவிக்கு உறுதுணையாக நின்று மோதிக்கு எதிராகச் சாட்சி சொன்னவர். அவரது வாக்குமூலமும் ஏற்றுக கொள்ளப் படவில்லை. சஞ்சையுடன் சிறையில் தள்ளப்படுகிறார். இவை போக, துணிச்சலான பத்திரிகையாளர் ஒருவர் ஸ்டிங் ஆபரேஷன் நிகழ்த்தித் துப்பறிந்த விஷயங்களும் காணொளி ஆதாரங்களாக நீதிமன்றத்தில் சமர்பிக்கப் படுகின்றன. ரகசியமாகப் படம் பிடிக்கப்பட்ட காணொளிகளில் உள்ளூர் பிஜேபி நிர்வாகிகளான பாபு பஜ்ரங்கியும் ஹரேஷ் பட்டும் குஜராத் கலவரங்களில் மோதியின் பங்கு குறித்து தெளிவாகவே எடுத்துரைக்கின்றனர். தனக்கு உதவி செய்வதற்காக கறாரான நீதிபதியை மோதி இடம் மாற்றினார் எனப் பாபு ஒப்புக்கொள்கிறார். 'மூன்று நாட்களுக்குள் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள்' என்று தன்னிடம் மோதி தெரிவித்ததாக ஹரேஷ் பட் கூறுகிறார். ஆனால், நீதிமன்ற விசாரணையின் போது இவ்விருவரும் பிறழ் சாட்சிகள் ஆகிவிடுகின்றனர். பத்திரிகை யாளரால் காகிதத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டதை அப்படியே வாசித்ததாகப் பாபு சொல்கிறார். மோதி தன்னிடம் பேசியதாகக் கற்பனை செய்தேன் என ஹரேஷ் பட் கதைவிடுகிறார்.பிபிசிக்கு மோதி அளிக்கும் பேட்டியில் தனக்கும் கலவரத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை எனக் கண்களை உருட்டி உருட்டி பதில் அளிப்பவர், 'இன்னும் சிறப்பாக இந்தச் சூழலைக் கையாண்டிருக்கலாம் என நினைக்கிறீர்களா?' எனும் கேள்விக்கு, 'ஆமாம், மீடியாவை மட்டும் இன்னும் சிறப்பாகக் கட்டுப்படுத்தியிருக்க வேண்டும்' எனச் சர்வாதிகாரி போலப் பேசுகிறார், ஆத்திரப்படுகிறார்.'மனித உரிமை மீறல்கள் நிகழவே இல்லையா?' என்ற கேள்விக்கு மோடியின் பதில்.'மனித உரிமை குறித்துப் பாடமெடுக்க ஆங்கிலேயர்களுக்கு அருகதை இல்லை.' அந்த ஆங்கிலேயச் செய்தி நிறுவனம்தான் தற்போது மோதியின் உண்மையான முகத்தைப் பல்லாயிரம் பேருக்குக் கொண்டு சேர்த்திருக்கிறது.

# இட ஒதுக்கீடு என்பது வறுமை ஒழிப்புத் திட்டமல்ல – கி. வீரமணி



முன்னேறிய வகுப்பினரில் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளவர்களுக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவது என்பது இந்திய அரசிய லமைப்புச் சட்டத்திற்கே முரணானது; இந்த அரசியலமைப்பை உருவாக்கியவர்களின் கொள்கைக்கு எதிரானது என்கிறார் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி.

பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளவர் களுக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வகைசெய்யும் மசோதாவை நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்துள்ள நிலையில், திராவிடர் கழகத்தின் தலைமையகமான பெரியார் திடலில் பிபிசியின் செய்தியாளர் முரளிதரன் காசி விஸ்வநாதனிடம் இது தொடர்பாகப் பேசினார் கி. வீரமணி. பேட்டியிலிருந்து:

கே.பொருளாதார ரீதியில் பின் தங்கியவர்களுக்கு இடஒதுக்கீடு அளிப்பது சரியான முடிவா?

ப. இடஒதுக்கீட்டின் அடிப்படைத் தத்துவமே காலகாலமாக கல்வி, வேலைவாய்ப்பு மறுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட ஜாதி அமைப்புக் கான தத்துவம். இந்தியாவில் தான் ஜாதி அமைப்பு இருக்கிறது. மனு தர்மம்தான் முதலில் இந்தியாவில் இட ஒதுக்கீட்டை உருவாக்கியது. இந்த ஜாதிக்காரர்கள் இந்த வேலைகளைச் செய்ய வேண்டும் என்று கூறியது. பிராமணனுக்கு கல்வியும் சத்திரியனுக்கு படையும் வைசியனுக்கு வியாபாரமும் சூத்திரனுக்கு அடிமைத் தொழிலும் செய்ய வேண்டுமென வகுக்கப்பட்டது. இந்த ஜாதி அமைப்பு காரணமாக மிகப் பெரும்பான்மையான மக்கள் வாய்ப்புகள் மறுக்கப் பட்டவர்களானார்கள். இதை சரி செய்யத்தான் 1928ல் நீதிக் கட்சி ஆட்சியில் இருந்தபோது, தமிழ் நாட்டில் இட ஒதுக்கீடு, வகுப்புவாரி உரிமை என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னால், அரசியல் சட்டத்தில் உள்ள சமத்துவம் என்ற தத்துவத்தைச் சுட்டிக்காட்டி, உயர்நீதிமன்றம் உச்ச நீதிமன்றம் ஆகியவை இட ஒதுக்கீடு செல்லாது என்ற தீர்ப்பை வழங்கின. இதற்குப் பிறகு, தந்தை பெரியார் போன்றவர்கள் போராடியதன் விளைவாக இதற்காக அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. அப்போது பிரதமராக ஜவஹர்லால் நேருவும் சட்ட அமைச்சராக அம்பேத்கரும் இருந்தனர். முதலில் கல்வியில் முன்னுரிமை அளிக்க அரசியல் சட்டத்தைத் திருத்தி 15-4 என்ற பிரிவை உருவாக்கினார்கள். தாழ்த்தப் பட்டவர்களைப் பொறுத்தவரை, ஷெட்யூல்ட் காஸ்ட் என்ற பட்டியல் இருந்தது. பிற்படுத்தப்பட்ட மக்களை வரையறுக்க என்ன செய்வது? அரசியல் சாஸனத்தின் 340வது பிரிவில் ஒரு அம்சம் இருக்கிறது. சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பின் தங்கிய சமூகத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென அதில் உள்ளது. அதே வரையரையை இந்த 15-4லும் வைத்துக் கொள்ளலாம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தின் 340வது பிரிவை உருவாக்கும்போதும் முதல் முதலாக அரசியல் சட்டத்தைத் திருத்தும் போது ஒரு கேள்வி எழுந்தது. பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களை இதில் சேர்க்க வேண்டுமா என்பதுதான் அந்தக் கேள்வி.

இந்த மக்கள் ஒதுக்கப்பட்ட சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும்தான்; பொருளாதார ரீதியில் இன்று பின்தங்கியவர்கள் நாளை மேம்படலாம். இன்றைய பணக்காரன், நாளை ஏழையாகும் வாய்ப்பு உள்ளது. ஆனால், இன்றைய கீழ் ஜாதிக்காரன் என்றைக்கும் கீழ் ஜாதிக்காரன்தான் என்பது சுட்டிக் காட்டப்பட்டது. அதனால்தான், சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் என்று மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

முன்னேறிய வகுப்பினருக்கு இடஒதுக்கீடு: மக்களவையில் மசோதா தாக்கல் 10 சதவீத இடஒதுக்கீடு : “பொருளாதாரத்தில் பின்

தங்கியவர்கள் என்பது மிகப் பெரிய மோசடி'' இருந்தபோதும் மத்திய அரசின் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு இல்லாமல் தான் இருந்தது. 340வது பிரிவை முன்வைத்து, இந்த விவகாரம் பற்றி ஆராய ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. அதுதான் மண்டல் ஆணையம். அந்த ஆணையம் பிற்படுத்தப் பட்டோருக்கு 27 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப் பரிந்துரைத்தது. அதிலும் 'சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பிற்படுத்தப்பட்டவர்கள்' என்பது குறிப்பிடப்பட்டது.

நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது, உயர் ஜாதியினரில் பொருளாதார ரீதியில் பிற்படுத்தப்பட்டோருக்கு 10 சதவீத இட ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தினார். இதற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கை நீதிபதி இந்திரா சஹானி தலைமையில் 9 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாஸன அமர்வு விசாரித்தது. இடஒதுக்கீடு என்பது 'சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் பிற்படுத்தப் பட்டவர்களுக்குத்தான்; பொருளாதார ரீதியில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அல்ல' என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் "இட ஒதுக்கீடு என்பது வறுமை ஒழிப்புத் திட்டமல்ல; அதற்கு வேறு திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். இது வாய்ப்புகள் மறுக்கப் பட்டவர்களுக்கு வாய்ப்பளிப்பது" என்பதைச் சுட்டிக்காட்டியது.

அதேபோல எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது, இடஒதுக்கீட்டைப் பெற 9,000 ரூபாய் ஆண்டு வருவாய் என்பதை ஒரு வரம்பாக அறிமுகப்படுத்தினார். இதனைத் தி.மு.க, தி.க., சி.பி.ஐ. ஆகிய கட்சிகள் எதிர்த்தன. ஓராண்டு இது அமலில் இருந்தது. இதற்கு அடுத்த தேர்தலில் அ.தி.மு.க. தோல்வியடைந்தது. அப்போது அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றை எம்.ஜி.ஆர். கூட்டியபோது நான் இது தொடர்பாக அவருக்கு விளக்கமளித்தேன். "பொருளாதார நிலை என்பது மாறக்கூடியது. பலரது வருமானம் நிலையில்லாதது. குறிப்பாக விவசாயிகளின் வருவாய் தொடர்ந்து மாறும். நல்ல மழைக்காலத்தில் நல்ல வருவாயும் வறட்சிக் காலத்தில் மிக மோசமான நஷ்டமும் ஏற்படும். அந்த நிலையில், பொருளாதார நிலையை எப்படி அடிப்படையாக வைக்க முடியுமென" கேட்டேன்.

அதேபோல, அரசு ஊழியராக இருப்பவர் காஞ்சிபுரத்தில் இருக்கும்போது 8,500 ரூபாயைப் பெறுவார். அவர் சென்னைக்கு மாற்றப்பட்டு, சிட்டி அலவன்சை கூடுதலாகப் பெறும்போது 9,000 ரூபாயைப் பெறுவார். உடனே அவர் முற்பட்ட வகுப்பாகிவிடுவார். இது எப்படி சரியாக இருக்கும் என்று கேள்வியெழுப்பினேன். எம்.ஜி.ஆர். விளங்கிக்கொண்டார். அதனை நீக்கினார்.

இப்போது அறிமுகப் படுத்தப்பட்டிருக்கும் இடஒதுக்கீட்டில், முன்னேறிய வகுப்பில் உள்ள ஏழைகள் என்று குறிப்பிடுகிறார்கள். அது எப்படி சரியாக இருக்கும்? இட ஒதுக்கீடு என்பது வறுமை ஒழிப்புத் திட்டமல்ல. அதற்கு வேறு திட்டங்கள் இருக்கின்றன. இரண்டின் நோக்கங்களும் வேறு.

இவர்கள் கொண்டுவரும் மசோதா உச்ச நீதிமன்றத்தில் நிற்காது. அதற்காக இவர்கள் அரசியல் சட்டத்தை திருத்தினாலும் அது செல்லாது. நம்முடைய அரசியல்சட்ட கர்த்தாக்கள் எதை மனதில் வைத்து 'சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும்' என்ற வார்த்தைகளை வைத்தார்களோ, அது அடிபட்டுப் போய்விடும் என்பதால் நீதிமன்றம் அதனை ஏற்காது. இது மத்திய அரசுக்குத் தெரியாமல் இல்லை.

ஐந்து மாநிலத் தேர்தல் தோல்விதான் அவர்களை இந்த முடிவை எடுக்கச் சொல்லியிருக்கிறது. விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் வரவிருக்கும் நிலையில், இந்தி பேசும் மாநிலங்களில் அதிக எண்ணிக்கையில் உள்ள பிராமணர்களின் வாக்குகளைப் பெற பா.ஜ.கவினர் விரும்புகிறார்கள். இதுபோக, காயஸ்தர்கள், சத்திரியர்கள் இருக்கிறார்கள். அவர்களது வாக்குகளையும் பெறுவதற்கான அரசியல் திட்டம் இது.

தவிர, 8 லட்ச ரூபாய் வருவாய் வரம்பு, நில வரம்பு ஆகியவற்றை முன்வைத்திருக்கிறார்கள். இந்த வரம்புகளைப் பார்க்கும்போது இது ஏழைகளுக்குப் பயன்படாது, நடத்தர வர்க்கத் திற்குத்தான் பயன்படும் எனத் தோன்றுகிறது. சமூக நீதியின் அடி வேரையே பறிக்கும் செயல் இது. தெளிவாக 15-4ல் குறிப்பிடப்பட்டது.

கே. பொருளாதார ரீதியில் பின் தங்கியவர்களுக்கான இட ஒதுக்கீட்டை நரசிம்மராவ் கொண்டுவந்தபோது, முன்னேறிய வகுப்பினருக்கு மட்டும் என்று குறிப் பிடப்பட்டிருந்ததா?

ப. அவர் முன்னேறிய பிரிவினர் என்றுகூடச் சொல்லவில்லை. The reservation of the 10 percent is in favour of the economically backward section of the people who are not covered by any existing reservations

என்றுதான் கொண்டுவந்தார். ஆனால், நீதிமன்றம் அதனை ஏற்கவில்லை.

கே. தற்போது கொண்டுவரப்பட்டுள்ள மசோதா ஒருவேளை நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டுவிட்டால்..

ப. நிறைவேறினால், நீதிமன்றத்திற்குச் செல்வோம். நாங்களே போவோம். நீதிமன்றத்தில் நிச்சயம் அடிபடும். குஜராத்தில் 2016ல் இதேபோல முற்பட்ட வகுப்பினரில் பொருளாதார ரீதியில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட்டது. அவசரச் சட்டமாகவே கொண்டுவந்தார்கள். இதனை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்குச் சென்றபோது, நீதிமன்றம் அதனை ஏற்கவில்லை. குஜராத்தில் செய்ததைத்தான் இவர்கள் இப்போது மத்தியில் செய்கிறார்கள். இதுவும் நீதிமன்றத்தில் அடிபட்டால் அவர்களுக்கு ஒரு கவலையும் இருக்காது. 'நாங்கள் செய்ய விரும்பினோம். நீதிமன்றம் தடுத்துவிட்டது' என்று சொல்லிவிடுவார்கள்.

கே. மத்திய அரசின் இந்த அறிவிப்பு வெளியான நிலையில், இந்திய அளவிலும் சரி, மாநில அளவிலும் சரி உடனடியாக எதிர்வினைகள் ஏதும் இல்லையே ஏன்?

ப. இனிமேல்தான் வரும். திருவாரூர் தேர்தல் தள்ளிவைப்பு போன்ற செய்திகளில் இது பெரிதாகத் தெரியாமல் போயிருக்கலாம். எங்களைப் போன்ற சமூக நீதிக்கான இயக்கங்கள் முதலில் பேசுவோம். பிறகு எல்லோரும் சேர்ந்துகொள்வார்கள். வட இந்தியாவில் உள்ள கட்சிகளைப் பொறுத்தவரை இட ஒதுக்கீட்டின் அடிப்படைத் தத்துவமே அவர்களுக்குப் புரியாது. இடஒதுக்கீட்டின் அடிப்படைத் தத்துவத்தை தென்னாட்டில்தான் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை அரசியலுக்குத்தான் முதலிடம். சமூக நீதிக்கு இரண்டாவது இடம்தான். தென்னாட்டிலும் கூட பினராயி விஜயன் போன்றவர்கள் இதை வரவேற்பேன் எனக் கூறுவது அதிர்ச்சியளிக்கிறது. ஏற்கனவே எம்.ஜி.ஆர். காலத்தில் வருமான வரம்பு கொண்டு வந்தபோது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எங்கள் நிலைப்பாட்டை புரிந்துகொண்டு ஆதரவாக இருந்தார்கள். ஆனால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வருமான வரம்புக்கு ஆதரவாக இருந்தார்கள். ஆனால், சில நாட்கள் கழித்து புரிந்துகொள்வார்கள் என நம்புகிறோம்.

கே. இந்தச் சட்டம் நிறைவேறிவிட்டால், மாநிலங்களும் உடனடியாக இதனைப் பின்பற்ற வேண்டியிருக்குமா?

ப. ஆமாம். மாநிலங்களும் இதைச் செய்ய வேண்டியிருக்கும். நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்படும் ஒரு சட்டம் எல்லோருக்கும் பொருந்தும். ஆனால், பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்க வேண்டு மெனவும் இவர்கள்தான் சட்டம் கொண்டு வந்தார்கள். எல்லா மாநிலங்களும் அதை நிறைவேற்றவில்லை. பல மாநிலங்களில் 12 சதவீதம்தான் அதை நிரப்பியிருக்கிறார்கள். ஆனால், இந்தக் குறையை அந்தந்த மாநிலங்களில் உள்ளவர்கள்தான் கேட்க வேண்டும்.

கே. முன்னேறிய ஜாதியினரில் இட ஒதுக்கீட்டிற்கான கோரிக்கை இந்திய அளவில் எவ்வளவு வலுவாக இருந்தது?

ப. கோரிக்கை இருந்தது. ரஜபுத்திரர்கள், பட்டேல்கள், தாகுர்கள் போன்றவர்கள் தொடர்ந்து கேட்டுவந்தார்கள். இதில் இன்னொரு சிக்கலும் இருக்கிறது. ஒட்டுமொத்த இட ஒதுக்கீட்டின் அளவு 50 சதவீதத்தை தாண்டக்கூடாது என உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இருக்கிறது. இந்த பத்து சதவீத இட ஒதுக்கீடு அளித்தால் அது 50 சதவீதத்தைத் தாண்டிவிடும். அதனால், இதனை அரசியல் சாஸனத்தின் 9வது ஷெட்யூலில் சேர்க்க முயற்சிப்பார்கள். ஆனால், அதிலும் நீதிமன்றம் தலையிடும் வாய்ப்பு உள்ளது.

கே. தமிழ்நாட்டில் சமீப காலமாக இடஒதுக்கீட்டிற்கு எதிரான மன நிலை உருவாகியிருப்பதாகத் தோன்றுகிறது. என்ன காரணம்?

ப. இந்தியாவில் 69 சதவீத இடஒதுக்கீடு இங்கேதான் இருக்கிறது. இன்றைய இளைஞர் களுக்கு அதைப் பற்றித் தெரியாது. அண்ணா மேம்பாலத்தின் மீது வேகமாகச் செல் பவர்களுக்கு, அந்தப் பாலம் கட்டுவதற்கு முன்பாக இருந்த போக்குவரத்து நெரிசல் பற்றித் தெரியாது. ஏனென்றால், அவர்கள் வசதியாகச் செல்ல யாரோ பாடுபட்டிருக்கிறார்கள். இன்றைய இளைஞர்கள் கல்வி, வேலைவாய்ப்பு, பதவி உயர்வு ஆகியற்றை இட ஒதுக்கீட்டில் பெற்றிருப்பார்கள். ஆனால், அது எப்படி வந்தது எனத் தெரியாது. தொடர்ந்து அவர்களுக்கு விளக்க வேண்டும்.

ஆனால், பொதுவாகப் பார்த்தால் அப்படியான எதிர் மனநிலை இல்லை யென்றுதான் சொல்வேன்.

●


# விட்னஸ்
# பேச மறுப்பதை பேசுவோம்

– பெரோஸ்
புரட்சிகர இளைஞர் கழகம்




மார்கோஸின் முகமற்றவர்களின் முகம் போல குரலற்றவர்களின் குரலாக விட்னஸ். மலக்குழி ஆணவ படுகொலைகள் பற்றிய கதை. பொதுவாகவே இந்த தொழிலோடு சாதி இணைக்கப் பட்டிருப்பதன் அரசியலை புரிந்துகொள்ள சமூகத்தில் புழக்கத்தில் உள்ள சொல்லாடல்களே போதுமானது. லைட் எரிய வில்லையா பேன் ஓடல பிரச்சனையா எலக்ட்ரீசியனை கூப்பிடு.குழால தண்ணி வரல ஹீட்டர் வர்க் ஆவல ப்ளம்பரை கூப்பிடு.ட்ரைனேஜ் லீக் ஆகுதா ? ட்ரைனேஜ் அடைப்பா (எனும் சாதி பெயரை சொல்லி) அவனை கூப்பிடு என்பதே வழக்கம். சோ இப்படியான ஒரு சமூகத்தின் மீது சுமத்தப்பட்ட சுமையை கண்டுக்காமல் போகும் பொது சமூகத்தின் மீது சப்புன்னு அப்பிருக்கிறது விட்னஸ்.அந்த சமூகத்தின் இந்த சிக்கலை ஒரு கழிவிரக்கமாக மட்டும் காட்டிவிட்டு செல்லாமல் 5 ஆண்டுகள் ஆய்வுகளின் படி இந்த வேலையிலும் கூட அவர்களுக்கு மறுக்கப்படும் சம்பளம் பற்றியும் மறுக்கப்படும் சுய மரியாதை பற்றியும் எல்லாம் முடிந்த அளவு விசாலமாக பேசி இருக்கிறது விட்னஸ். (படத்தில் வரும் சூப்ரவைஸரின் கொடுமையை விட நிஜத்தில் மிக கடுமையாக நடந்ததெல்லாம் உண்டு)கூடவே இது போன்ற நிகழ்வுகளின் போது ஏன் இந்த வேலை செய்ய வேண்டும் படிச்சு நல்ல வேலைக்கு போகலாம்ல என கேட்கப்படும் தற்குறித்தனமான கேள்விகளுக்கு மிக அறிவுப்பூர்வமாக கதையில் வரும் பேர்லர்

(இணை கதையில்) ஸ்டோரில பதில் சொல்லி இருக்கார் எழுத்தாளர்.நல்லா படித்து மிக முக்கியமான பொறுப்பில் நல்லா சம்பாதிக்குன் ஷ்ரத்தா பாத்திரம். ஆனாலும் அவளால் நிம்மதியாக வாழ முடியாமல் அவளை துரத்தும் சோஷியல் ஏன்சைட்டி அந்த சமூக பதட்டம் இங்கே அருந்ததியர்களுக்கும் இஸ்லாமி யர்களுக்கும் (வேறு வேறு காரணங்கள்) பொதுவானது. அதை அனுபவிப்பவன் மட்டுமே இந்த தற்குறி கேள்விகள் கேட்க்க மாட்டான். ஆளுமை திறம் மிக்க ஷ்ரத்தா பாத்திரம் இறுதியில் தோல்வியை சந்திப்பதாக மிக நேர்மையாக அதை பதிவு செய்திருக்கிறார் எழுத்தாளர். அதே போல சின்ன சின்னதா வரும் ஃபில்லிங்குகள் (fillings) மிக நேர்த்தியாக இருந்தது. உதாரணம் அதிகாலை தூய்மை பணியாளர்கள் காட்சிகளில் வரும் ஒலி பில்லிங்காக வரும் அந்த பாங்கு ஓசை.பஸ்ல கடந்து செல்லும் போது இந்திராணி பாத்திரம் சொல்லும் வீடு மாற்றப்பட்ட செய்தி.இறுதியாக தீர்பு சொல்லபட்டும் நாளில் கோர்ட் சீனில் வந்து நிற்கும் வேனிலிருந்து இறங்கி வரும். (கௌசல்யா சங்கர் படுகொலையின் குற்றவாளிகள் போல) கணவன் மனைவி மற்றும் இளைஞர்கள். மலக்குழி மரணமும் ஒரு ஆணவப்படுகொலையே என்பதை சொல்லிச் செல்கிறது அந்த காட்சியின் அந்த ஒற்றை ப்ரேம். மிக முக்கியமாக தமிழ் சினிமாவின் ஒற்றை நபர் வந்து சமூக விடுதலையை சாத்தியப்படுத்தும் பிற்போக்கான காட்சிகளிலிருந்து பார்வையாளர்களை மீட்டு இரட்சித்தற்கு ஆயிரம் நன்றிகள். ஆண்டவரே உங்களுக்கு த்தோத்திரம். அப்படியே அந்த இறுதி தீர்பு அது அற்புதம். ஒருவேளை இப்படியாக இல்லாமல். ஒரு ஹேப்பி க்ளைமேக்ஸாக இதை முடித்திருந்தால், பாபர் மசூதியின் தீர்பு, பில்கீஸ்பானுவின் தீர்பு வந்து எழுத்தாளரை முகத்தில் அறைந்திருக்கும். பொதுவாக நமக்கான படம் என்றால் க்ராஃப்ட பார்க்காத கண்டண்ட பாரு என சமாதானம் சொல்லிக் கொள்வோம். இந்த படத்தில் க்ராஃப்டாகவும் ரொம்ப நல்லா இருக்கு.குறைகளும் உண்டு ஓரிரண்டு குறைகள்தான்.அது என்னன்னா முதல்ல அந்த சிறசிறை காட்சிகள் சிறை இவ்ளோ ரொமாண்டிக்காக இருந்திருந்தால் அடிக்கடி ஜெயிலுக்கு போகலாம் போல. :) உண்மையில் சிறை உள்ளிருப்பது ஒரு வலி என்றால் மனு போட்டு கைதாகி இருப்பவரை பார்ப்பதும் வலிதான் (அதுக்கு தனியா ஒரு படமே எடுக்கலாம்) மொத்தமா கம்பிக்கு வெளியே ஒரு கம்பிக்கும் இன்னொரு கம்பிக்கு இடையே இரண்டடி இடைவெளி வேற இருக்கும் கத்தி கூச்சலிட்டுத்தான் பேச முடியும் 100 வார்த்தையில் 10 வார்த்தைய எப்படியாவது வாங்கிடுவாங்க அவ்ளோதான் கிடைக்கும். அடுத்தா படத்தில் வக்கீல் பேசும் வசனம் தோழர் ஜெயிலுக்கு போகாம இருந்தால் நானே சமாளிச்சிருப்பேன் என்பது. ஏன்னா சங்கங்கள் எப்போதும் தனி மனிதனை நம்பி இல்லை. அடுத்தவர் அதை தொடர்ந்து முன் எடுத்து செல்வார்கள் கைதான தோழரின் வழக்கையும் உட்படுத்தி. இந்த இரு சிறு குறைகள் தாண்டி படம் அவசியம் சமூகம் உரையாட வேண்டிய படம். உழைக்கும் மக்களுக்கான கலை வடிவங்களை கொண்டாடுவோம்.



சிறுகதை

# பரதேவதை

–மீ.தே. தமிழரசன்




தலித் இலக்கியம் படைப்பவர்கள் தலித்தாக இருக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் தங்கள் உணர்வுகளை உயிரேட்டமாய் வெளிப்படுத்த முடியும். அது போலவே பெண்ணியம் பேசும் எழுத்தாளர்கள் ஒரு பெண்ணாய் இருந்தால் மட்டுமே, அவர்களின் மன உணர்வுகளை சரியாக வெளிப்படுத்த முடியும். இந்தக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதா அல்லது மறுப்பதா என்று அகிலனுக்குப் புரியவில்லை. என்றாலும் இது சரியாய் இருப்பதற்கும், தவறாக இருப்பதற்கும் வாய்ப்பு இருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. அகிலன் ஒரு பெண்ணியவாதிதான். அவனுக்கு அதில் எந்த சந்தேகமும் இல்லை. இப்போது கூட அவன் ஒரு பாலியல் தொழிலாளியை சந்தித்து அவரின் நசுக்கப்பட்ட உணர்வுகளை எழுத வேண்டும் என்பதற்காகத்தான் அந்த நகரத்திற்கு வந்திருந்தான்.அந்த நகரம் பற்றி அகிலன் நிறைய கேள்விப்பட்டிருந்தான்.

காவல் துறையின் கெடுபிடிகள் அங்கே அதிகம் இல்லை. போலீஸ் கமிஷ்னர் கூட விபச்சாரத்தை சட்டப்படி அனுமதித்து விட்டால், கொலை, கற்பழிப்பு போன்ற குற்றங்கள் குறைய வாய்ப்பிருக்கிறது என்று ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியில் தெரிவித்திருந்தார். பல உளவியல் நிபுணர்களும் அவர் சொல்வதை வரவேற்றார்கள். அதற்கு அவர் மும்பையின் Grand Road ஐ உதாரணம் காட்டினார். மும்பையின் floating poppulation க்கு Grand Road ஒரு வடிகாலாக அமைந்திராவிட்டால், அங்கே கற்பழிப்புக்கள், கொலைகள், யாவும் காவல் துறையின் கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல் போயிருக்கும் என்றார். அது நிதர்சனமான உண்மைதான் என்று அகிலனுக்கும் தோன்றியது. ரயில் நிலையத்தில் இருந்து வெளியே வந்ததும் ஆட்டோவில் ஏறிக் கொண்ட அகிலன் அந்தக் குறிப்பிட்ட லாட்ஜின் பெயரைக் கூறி அங்கே போகும்படிச் சொன்னான். ஆட்டோ டிரைவர், டிப் டாப்பாக இருந்த அகிலனை உச்சி முதல் பாதம் வரை அலட்சியமாக நோக்கினான். பின்..." டூ ஹன்ட்ரட் ஆகும் ஸார்" என்றான். லாட்ஜ் பேரைக் கேட்டதும், அவன் வேண்டுமென்றே ரேட்டை உயர்த்துகிறான் என்பதையறிந்த அகிலன் "சரி நீ நேரா கமிஷ்னர் ஆஃபீஸ் போ" என்றான். ஆட்டோ டிரைவர் ஒரு கணம் ஆடிப் போய் விட்டான். "ஸார்.. நீங்களா எவ்வளவு குடுத்தாலும் ஒகே ஸார்." என்றான்

அசடு வழிய." சரியான ரேட் என்ன?" "எயிட்டி ருப்பீஸ் ஸார்." " சரி போ" அகிலன் தன் மொபைலில் ஏதோ பார்த்தபடி வருவதை அடிக்கடி ரிவர்வியூ மிரரில் பார்த்துக் கொண்டான். அந்த லாட்ஜ் மரங்கள் அடர்ந்த ஒரு மறைவான பகுதியில் உள்ளடக்கமாக இருந்தது. வெளியே சாலையில் இருந்து பார்த்தால் அப்படியொரு லாட்ஜ் அங்கே இருப்பதே வாடிக்கையாளர் களைத் தவிர புதிதாக வரும் யாருக்கும் தெரியாது. ஆட்டோ லாட்ஜின் உள்ளே வந்து போர்ட்டி கோவில் நின்றது. அகிலன் நூறு ரூபாய் கொடுத்ததும் அவன் பாக்கி இருபது ரூபாய் தர சில்லரையைத் தேடினான்." பரவாயில்ல. வச்சுக்கோ!" என்று அகிலன் சொன்னதும் மகிழ்ச்சியோடு,"எஞ்சாய் ஸார்" என்றபடி ஆட்டோவைத் திருப்பி ரிவர்வியூ மிரரில் பார்த்தபடியே சென்றான். முதல் மாடியில் ஒரு AC டபுள் பெட்ரும் அறையை எடுத்துக் கொண்டான் அகிலன். கையில் சிறிய ப்ரீஃப் கேஸ் தவிர பெரிய லக்கேஜ் எதுவும் இல்லாததால் ஹோட்டல் பணியாளரைத் தவிர்த்து விட்டுத் தானே 104 ஆம் நம்பர் அறையின் Key ஐ வாங்கிக் கொண்டு லிஃப்ட்டைப் பயன்படுத்தாமல், படிக்கட்டில் ஏறி முதல் மாடிக்கு வந்தான். காரிடரில் நடந்தபடியே அறையைக் கண்டுபிடித்து, விசிட்டிங் கார்ட் போன்ற அறை சாவியை சென்ஸார் லாக்கில் காட்டிக் கதவைத் திறந்தான். key ஐ அதன் இடத்தில் பொருத்தியதும், விளக்குகள் எரிந்தன.அந்த அறை மிகவும் நேர்த்தியாக இருந்தது. தலையணை மற்றும்படுக்கை விரிப்புக்கள் புதிதாக இருந்தன. உள்ளே நுழைந்ததுமே அடிக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த ரூம் ஸ்ப்ரே ரம்மியமாய் மனதைக் கவர்ந்தது. ரூம் வாடகை கூட பெரிய அளவில் இல்லை. வேறு எதிலோ சரிக் கட்டிக் கொள்கிறார்கள் போல.மதியம் ரெஸ்டாரண்ட் சென்று சாப்பிட்டு விட்டு வந்து, நன்றாக உறங்கி எழுந்த அகிலன் குளித்து ஃப்ரஷ் ஆனான்.வந்த வேலையைப் பற்றி நினைக்கும் பொழுது, அதற்காக யாரை எப்படி அணுகுவது என்று குழப்பமடைந்தான். அப்போது, அறையின் அழைப்பு மணி ஒலித்தது. "Yes Come in " என்றான் அகிலன். அவர்களாகவே அப்ரோச் செய்வார்கள் என்று தனக்கு சொல்லப்பட்டது வொர்க் அவுட் ஆகிறது என எதிர்பார்த்திருக்க, ஒரு பத்து வயது சிறுவன் உள்ளே வந்தான். தயக்கம் ஏதுமின்றி "ஸார் டிரிங்ஸ் ஏதாவது?" என்றான். பார்ப்பதற்கு ரொம்பவும் ஸ்மார்ட் ஆகவும் இருந்தான். "No thanks." "ok sir." என்றவன் கதவைத் திறந்து வெளியே போனான். அவனிடம் "அது" பற்றிக் கேட்க மனசு வரவில்லை. அடுத்த நிமிடம் கதவைத் தட்டிவிட்டு உள்ளே எட்டிப்பார்த்து, "ஸார் வேற ஏதாவது? "அவன் அதைத்தான் குறிப்பிடுகிறான் என்ற போதும், அவனிடம் சொல்ல தயக்கமாக இருந்தது." பயப்படாதீங்க ஸார். பாதுகாப்பு ஏற்பாடு கூட கிடைக்கும். வர்ரவங்க கைல மெடிக்கல் செக்கப் சர்ட்டிஃபிக்கெட் கூட இருக்கும்."அவன் பேசவில்லை. அனுபவம் பேசியது. என்றாலும் காலத்தின் கொடுமை படிக்க வேண்டிய வயசில் ஒரு சிறுவனை என்னவாய் ஆக்கிவிட்டிருக்கிறது." ம் அனுப்பு." என்றதும், மகிழ்ச்சியோடு " தேங்ஸ் ஸார்" என்றபடி கதவை அடைத்து விட்டுச் சென்றான். அகிலன் பேச்சிலர் தான். இது மாதிரி இடத்துக்கு வருவது கூட அவனுக்கு முதல் அனுபவம் தான்.மைக், ரெக்கார்டர், வீடியோ, என்றெல்லாம் போனால் அதை அவர்கள் விரும்ப மாட்டார்கள். அவலமான காரியம் செய்து பிழைக்க நிர்பந்திக்கப்பட்டவர்கள், அந்த அவலத்தையே விற்க ஒருபோதும் துணிய மாட்டார்கள். அவர்களுக்குத் தெரியாமல் அவர்களிடம் கேட்க நினைக்கும் கேள்விகளைக் கேட்டு பதில்களை செல்ஃபோனிலேயே ரெக்கார்ட் செய்து கொள்ளலாம். என்றாலும் அப்படி அவர்களை ஏமாற்ற அகிலனின் விரும்பவில்லை.வரப் போவது யார்? வரப்போகிற பெண் எப்படி நடந்து கொள்ளப் போகிறாள் என்பதெல்லாம் அவன் ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது. ப்ரீஃப் கேசைத் திறந்து பௌலோ கொய்லோ வின் "பதினொரு நிமிடங்கள்" என்கிற புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். படிக்க ஆரம்பித்ததில் நேரம் போனதே தெரியவில்லை. அநேகமாய் ஒரு மணி நேரம் கடந்திருக்கும். அழைப்புமணி ஒலித்தது. கதவை லாக் செய்ய வில்லை. "எஸ்.. கம் இன் ப்ளீஸ்." என்றான். கதவைத் திறந்து உள்ளே

வந்தவள் மிகவும் பரபரப்போடு காணப்பட்டாள். "ஸார், If you don't mind எனக்காக ஒரு டென் மினிட்ஸ் வெயிட் பண்ண முடியுமா? நான் கொஞ்சம் ரீ ஃப்ரஷ் பண்ணிக்கறேன்." "ok" என்று சொல்லி விட்டு கையில் இருந்த புத்தகத்தை மீண்டும் படிக்க ஆரம்பித்தான் அகிலன். மனசு புத்தகத்தில் ஒன்றவில்லை. வந்திருந்த பெண்மணிக்கு 30 வயது இருக்கும் என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். புடவை கட்டி ஒரு நல்ல குடும்பப் பெண் போல இருந்தாள். முகம் நயன்தாராவின் சாயலில் இருந்தது. கொஞ்சம் கூட மேக்கப் போட்டுக் கொள்ளவில்லை. அவள் தன் கையில் கொண்டு வந்த ஹேண்ட் பேகிலிருந்து தேவையானதை எடுத்துக் கொண்டு சொந்த வீடு போல Rest room க்குப் போனாள். பத்து நிமிடத்தில் குளித்து மேக்ஸி போட்டுக் கொண்டு, லாட்ஜின் டவலால் தலை துவட்டியபடி எதிரில் உள்ள குஷின் சேரில் அமர்ந்தாள். "ஸார், First Show film போயிட்டேன். Phone வந்தப்ப நான் தியேட்டர்ல இருந்தேன். படம் பாக்கிறது எனக்கு ரொம்பப் புடிக்கும். எனக்குப் பிடிக்கிற எதையும் நான் பாதியில விட்டுட்டு வரமாட்டேன். அதான் லேட்! Sorry ஸார். "ரொம்பவும் எதார்த்தமாகப் பேசினாள். அவள் பேச்சில் கொஞ்சம் கூடப் பகட்டோ போலித்தனமோ தெரியவில்லை. மறுபடியும் அகிலனைப் பார்த்து, "ரொம்ப ஹேண்ட்சம் ஆ இருக்கீங்க. Gym க்கு போவீங்களா?" "ம். ரெகுலரா போவேன்." " எனக்கு பசிக்குது. நீங்க சாப்பிட்டீங்களா?" "நான் என் டின்னர் 7.30 க்கே முடிச்சிருவேன். உங்களுக்கு என்ன order பண்ண?" என்று ரிசீவரை எடுக்க,, "No thanks ஸார். லேட்டாகு தேன்னு நான் வர்ர வழியில பிரியாணி பார்சல் வாங்கிட்டு வந்திட்டேன். சாப்பிட்றவா?" அகிலன் அவள் Body language ஐ கவனித்தான். அவள் முகபாவத்துக் கேற்ப மொத்த உடம்பும் மிக நளினமாக அவளுக்கு ஒத்துழைத்தது." ம். கேரி ஆன்." என்றான்.அவள் தேங்ஸ் சொல்லிவிட்டு பிரியாணிப் பொட்டலத்தை எடுத்து டீ பாயின் மீது வைத்து விட்டு," ட்ரிங் சாப்பிடறீங்களா?" "எனக்குப் பழக்கமில்ல. உங்களுக்கு வேணும்னா ஆர்டர் பண்ணட்டுமா?" "எங்கிட்டெ இருக்கு. எனக்கு உங்க பர்மிஷன் மட்டுந்தான் வேணும்." என்றவள் எழுந்து சென்று கண்ணாடி டம்ளரையும் ஃப்ரிட்ஜிலிருந்து, ஐஸ் க்யூப்ஸ் ஐயும் எடுத்து வந்து டிரிங்ஸை மிக்ஸ் செய்து,டிரிங்ஸ் கோப்பையை மேலே உயர்த்தி" "சியர்ஸ் ஃபார் அவர் கம்பெனி" என்றவள் ஒரு பெக்கை அருந்திய படியே, பிரியாணியை சாப்பிட ஆரம்பித்தாள்.பின் இடையில் நிறுத்தி, "ஏன் ஸார் நீங்க எதுவும் பேச மாட்டீங்களா?"அகிலன் தயங்கியபடியே,"எனக்கு இதான் ஃபர்ஸ்ட் டைம். அதான்என்ன பேசறதுன்னு தெரியல.""நீங்க மேரீட்டா ?""இல்லெ." "அப்ப, இது உங்க ஃபர்ஸ்ட் நைட்?" என்று அவள் சிரிக்க,"நீங்க தப்பா நெனைக்கலேன்னா, உங்க லைஃப் பத்தித் தெரிஞ்சுக்கலாமா?"என்றான் அகிலன். அவள் பலமாக சிரித்தாள். "ஏன் எனக்கு லைஃப் குடுக்கப் போறீங்களா? இந்த மாதிரி நிறைய கேட்டாச்சு. பாத்தாச்சு." " Sorry. I didn't mean it. உண்மையெச் சொன்னா இது எனக்கு ஒரு ஃப்ரஷ் எக்ஸ்பீரியன்ஸ். Not more than that."" கதை எழுதப் போறீங்களா?" "ஒரு டாக்குமென்ட்ரி ட்ரை பண்ணப் போறேன். "அவள் வெறுப்போடு," ஷிட். ஒரு பொம்பளகிட்டத் தெரிஞ்சுக்க உங்களுக்கு உருப்படியான விஷயம் வேற எதுவும் கிடைக்கலையா?" "உங்கள நான் டிஸ்டர்ப் பண்ணியிருந்தா மன்னிச்சிருங்க. நீங்க



நெனைக்கிற மாதிரிப் பெண்களப் பத்தித் தரக்குறைவா எழுதி அத வியாபாரம் செய்யற Cheap ஆன ஆளில்ல நான். "அவள் மௌனமாகப் பார்த்தாள் என்றாலும் அந்தப் பார்வையில் ஒரு அலட்சியம் தெரிந்தது. அகிலன் தொடர்ந்தான். "உலகத்தில பல நாடுகளிலயும் இத ஒரு முறைப்படுத்தப்பட்ட தொழிலா அங்கீகரிச்சிருக்காங்க. ஆனா இங்க மட்டுந்தான் இத செய்யறவங்களுக்கு எந்தப் பாதுகாப்பும் கிடைக்கறதில்ல. சட்டமே இது ஒரு குற்றமாத் தான் பாக்குது, தண்டனையும் வழங்கப்படுது. முறையான சம்பளம் கிடைக்கறதில்ல. புரோக் கர்கள் அவங்க உழைப்பெ அபகரிச்சிடறாங்க. சமூகத்தில அவங்களுக்கு எந்த மரியாதையும் இல்லாம இருக்கு. நம்ம கலாச்சாரமே கற்பெ பெண்கள் மேலதான் திணிச்சிருக்கு. இதையெல்லாம் வெளிப்படுத்தி அவங்க லைஃபில ஒரு விடியல் ஏற்படுத்தணும்னு தான் நான் என் டாக்குமெண்ட்ரிய எடுக்க ட்ரை பண்றேன்."அகிலனின் பேச்சு அவளிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த வில்லை. மறுபடியும் ஒரு லார்ஜ் எடுத்து ஐஸ் மிக்ஸ் செய்து கண்களை மூடிக் கொண்டு குடித்தாள்." சரி, என் லைஃப் பத்தித் தானே சொல்லணும், சொல்றேன், எனக்கு அதுல ஒரு வெட்கக்கேடும் இருக்கறதா தெரியல.. ஆரம்பிக்கட்டா? "என்றவள் மீண்டும் ஒரு பெக் போட்டுக் கொண்டாள்.

அவள் சொன்ன கதை சினிமா மோகத்தில் வீட்டை விட்டு ஓடி வந்து ஒரு புரோக்கரிடம் ஏமாந்து போன ஒரு அபலைப் பெண்ணின் வழக்கமான கதை தான். அவள் அதை சொன்ன விதம் தான் அகிலனை பாதித்தது. அவள் யாருடைய கதையையோ சொல்வதைப் போல் சுவாரஸ்யமாக சிரித்தபடியே சொன்னாள். அப்போது அவள் முகத்தில் நவரசமும் வந்து போனது. கதை முடிந்ததும் "சமரசம் உலாவும் இடம் இதுதான்." என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள். அந்த வார்த்தைகள் நெறி கெட்ட இந்த ஆணாதிக்கச் சமூகத்தை சாட்டையால் விளாசியதைப் போலிருந்தது. அகிலானால் அவளின் நகைமுரணான உணர்வுகளை எளிதாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவன் அழுதுவிட்டான்.அகிலன் தனக்காக அழுதது அவளை மிகவும் பாதித்து விட்டது. அவள் அவனை மௌனமாகப் பார்த்தாள்.கை கழுவிக் கொண்டு வந்தாள். கட்டிலில் அமர்ந்திருந்த அகிலனின் அருகில் வந்து நின்று, அவன் தலையைக் கோதி விட்டாள். அவனைத் தொடுவதற்கே அவள் விரல்கள் நடுங்கின. முதல் முறையாக ஒரு குற்றம் செய்வது போல் அவளுடைய இதயம் சீரற்றுத் துடித்தது.அவள் விரல்கள் அவனுடைய முகத்தை வருடியது. அவன் கண்ணீர் அவள் நெஞ்சை நனைத்தது. அவன் முகத்தைத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள் அவள்.அகிலன் உறக்கத்தில் இருந்து விழித்து எழுந்த போது காலை மணி ஏழு.அந்த அறையில் அவள் வந்து போனதற்கான சுவடு கூட இல்லை. டீப்பாயின் மீது மட்டும் அவன் அவளுக்குக் கொடுத்த 2000 ரூபாய் நோட்டின் மீது கண்ணாடி டம்ளர் வைக்கப்பட்டிருந்தது. அவள் பணத்தை எடுத்துச் செல்ல மறந்து போய் விட்டாளா? அழைப்பு மணி ஒலிக்க, ஒருவேளை அவளாக இருக்குமோ? என்று எண்ணிய படியே " எஸ், கம் இன்' என்றான் அகிலன்.அந்தப் பத்து வயது புரோக்கர் சிரித்தபடியே உள்ளே வந்தான். தலையை சொரிந்தான். அந்த செய்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட அகிலன், தன் பர்ஸை எடுத்து 500 ரூபாயை அவனிடம் கொடுத்தான்." Thanks ஸார். ஒன் டே மேட்ச் தானா?ரிசப்ஷன்ல சொன்னாங்க" என்றான்." ஆமா. நேத்து வந்தவங்கள கொஞ்சம் வரச் சொல்றியா?""அது முடியாது ஸார். அவங்க பகல்ல லாட்ஜ் பக்கம் வர மாட்டாங்க.?"அகிலன் யோசிக்க, "என்ன லவ் மேட்டரா ஸார் ?"நமட்டு சிரிப்போடு கேட்டான்.." அதில்லடா, அவங்க பணத்தை மறந்திட்டுப் போயிட்டாங்க. அத குடுத்திறலாமேன்னு தான்.""அட, இம்புட்டுத்தான் மேட்டரா. இதுக்கா இப்படி பம்முற. அத இப்படிக் குடு ஸார். நான் கொண்டு போய் குடுத்தர்றேன்."அகிலன் அவன் மீது நம்பிக்கையின்றிப் பார்க்க அதைப் புரிந்து கொண்ட சிறுவன்,"அட நீ ஒண்ணு ஸார். என் மேல நம்பிக்கையில்லையா? வந்துச்சே அது வேற யாருமில்ல. என் அம்மாதான்."அகிலனின் தலையில் ஒரு பேரிடியாய் இறங்கியது அந்த எதார்த்த உண்மை.!

# காலத்தின் தேவை கம்யூனிஸ்டுகளின் ஒற்றுமை

# பயில்வோம்! பகிர்வோம்! அமைப்பாவோம்!

– செந்தில்



நேராக நிற்பதற்கே உழைத்தான் மனிதன்

நின்றபின்னே நேர் நிலையில் உழைத்தான் மனிதன்

கைகளின் விடுதலைக்கே உழைத்தான் மனிதன்

விடுதலைக் கைகளாலும் உழைத்தான் மனிதன்

கைகளின் விடுதலை புலன்களின் தெளிவு

உழைப்பின் மேல் பேச்சுபேச்சின் மேல்

உழைப்பு மீண்டும் மீண்டும் சுழன்றன ஆண்டுகள்!

பகுக்கவும் தொகுக்கவும் பழகியது மூளை!

கைப்பிடித்த பொருள்களிலே கருவி செய்தான்

கருவிகளில் பற்பல வகைகள் செய்தான்கற்கருவி

மரக்கருவி உலோகக் கருவி என

கருவிகள் செய்வதற்கே உழைத்தான் மனிதன்

செய்தக் கருவியாலும் உழைத்தான் மனிதன்

கருவிகளின் வளர்ச்சிக்கே புரட்சி செய்தான்

புரட்சிமய கருவிகளால் வாழ்ந்து நிலைத்தான்

வில் அம்பு வேட்டையாட செய்து கொண்டான்

விளைவாக கால்நடையை வளர்த்து வாழ்ந்தான்!

மேய்ச்சல் நிலம் தேடி அழைத்து சென்றான்

நீரோட்ட பாதையிலே நிலைத்து வாழ்ந்தான்

வாழ்ந்ததனால் பாசனத்தை கற்றுக் கொண்டான்

ஏர் கலப்பை மண்வெட்டி செய்து கொண்டான்

முறையாக விவசாயம் செய்ததாலே

சீரான மொழித் தொடர்பு வளர்ந்தங்கே

மொழியோடு இலக்கியமும் செழித்ததங்கே

கைத்தொழிலும் கலை பொருளும் சேர்ந்ததங்கே

உழைப்போடு கலைகள் பல வளர்த்து

வாழ்ந்து பொதுவுடைமை வாழ்வுதனை கண்டான் மனிதன்

உபரியை பெருக்கி உடமையை பெருக்கி
இனத்தினை பெருக்கி கடமையை பெருக்கி

கட்டளை பெருக்கி குற்றம் பெருக்கி
கொலைகளை பெருக்கி போர் முறை கண்டான்

வர்க்க மாய் நின்றான்

வர்க்க மாய் நின்ற நடைமுறையால்

அன்பெனப் பேசும் கருத்தியல் பிறந்து

ஆளெனப் பேசும் கருத்தியல் பிறந்து

இறை எனப் பேசும் கருத்தியல் பிறந்து

இறையாண்மைப் பேசும் கருத்தியல் பிறந்து

தத்துவம் என்ற உலகியல் பார்வைபிறந்து

வளர்ந்ததுவர்க்கப் போராட்டமாய் நின்று நிலைத்தது.

வர்க்க சமுதாய வாழ்கை இங்கே!

வர்க்க மற்ற சமுதாயம் எங்கே எங்கே?

வர்க்க போர்கள் நடக்குது இங்கே

வர்க்க மற்ற சமுதாயம் எங்கே எங்கே?
தொழில் புரட்சிகள் நடக்குது இங்கே
வர்க்க மற்ற சமுதாயம் எங்கே எங்கே?
நான்கு தொழிற் புரட்சி நடத்தது இங்கே
வர்க்க மற்ற சமுதாயம் எங்கே எங்கே?
நான்குகட்ட தொழிற்புரட்சி தந்ததென்ன தோழனே?
நாமிங்கே பகிர்ந்து கொள்ளலாமா தோழனே?
முதல் தொழிற்புரட்சி தந்ததென்ன தோழனே?
முழுமையாக பகிர்ந்து கொள்ள தொடங்கலாமா தோழனே
நிராவி எந்திரங்கள் தோற்றம் கொண்டு தோழனே!
முதற்தொழிற் புரட்சி நடந்ததன்றோ தோழனே!
கூறு போட்ட ஆண்டைகள் குலை நடுங்க தோழனே!
கூட்டுழைப்பு தொழில் முறை வளர்ததன்றோ தோழனே!
கற்பனைகள் தவிடு பொடி யானதன்றோ தோழனே!
விஞ்ஞானம் வேர்பிடித்து வளர்ந்ததன்றோ தோழனே!
விஞ்ஞான சோசலிசம் பிறந்ததன்றோ தோழனேகாரல் மார்க்ஸ் பெயர் தாங்கி நிற்பது காண் தோழனே
முதற்தொழிற் புரட்சிதந்த கொடை தோழனே
முதல் வீரன் காரல் மார்க்ஸ் செவ்வணக்கம் தோழனே!
இரண்டாம் தொழிற்புரட்சி தந்ததென்ன தோழனே?
இனிதாக தொடர்ந்து நாம் பகிரலாமே தோழனே?
மின்சார சாதனங்கள் வளர்ந்ததன்றோ தோழனே!
கிராமங்களும் மின் ஒளியில் மிளிர்ந்ததன்றோ தோழனே!
பொதுத்துறை நிறுவனங்கள் வளர்ந்ததன்றோ தோழனே!
பொதுக் கல்வி கூட்டங்கள் திறந்தது காண் தோழனே!
பாட்டாளி ஆட்சி முறை பிறந்ததன்றோ தோழனே!
லெனின் ஸ்டாலின் பெயர் தாங்கி நிற்பது காண் தோழனே
இரண்டாம் தொழிற்புரட்சி தந்தகொடை தோழனே
லெனினும் ஸ்டாலினும் பாட்டாளி வீரனே!
செவ்வணக்கம் செவ்வணக்கம் செவ்வணக்கம் தோழனே!
மூன்றாம் தொழிற்புரட்சி தந்ததென்ன தோழனே?
முன்னுரையை யாவது பகிரலாமே தோழனே?
மின்னணு சாதனங்கள் வளர்ந்ததன்றோ தோழனே!
மிகப்பெரிய சிக்கல்களும் எளிதாச்சு தோழனே!
சோசலிச நடத்தை விதி பிறந்ததன்றோ தோழனே!
மூன்றாம் தொழிற்புரட்சி தந்த கொடை தோழனே
மாசேதுங் பாட்டாளி படையணியின் வீரனே!
செவ்வணக்கம் செவ்வணக்கம் செவ்வணக்கம் தோழனே!
நான்காம் தொழிற்புரட்சி தந்ததென்ன தோழனே?
நாமிங்கே பகிர்ந்து கொள்ள தவறலாமோ தோழனே?
செயற்கை நுண்ணறிவு வளர்ந்தாச்சு தோழனே!
செயல்பாட்டில் பிற்போக்கு தடையாச்சு தோழனே!
பூமியில் தொழில் புரட்சி முடிந்தாச்சு தோழனே
விண்வெளியில் தொழில் புரட்சி நிகழ்த்த வேண்டும் தோழனே!
பாசிசத்தை பூமிப் பந்தில் துடைக்க வேண்டும் தோழனே
சோசலிசம் பூமியிலே நிறுவ வேண்டும் தோழனே
மாலெமா சிந்தனையை ஏந்த வேண்டும் தோழனே!
மனம் திறந்து பகிர்ந்துகொள்ள துணிவு கொள்வோம் தோழனே!
பயில்வோம் பகிர்வோம் அமைப்பாவோம் தோழனே!
பயில்வோம் பகிர்வோம் அமைப்பாவோம் தோழனே!
இது காலத்தின் தேவை கம்யூனிட்டுகளின் ஒற்றுமை

# பொங்கல் சிந்தனைக்கு

– முத்து முருகன்



பொங்கல் பானையும்
மாடு கரும்பும் ஏரும்
அடையாளச் சின்னங்கள்
நீரும் நிலமும் உயிரின் அடிப்படை
நீர் என்னவோ கேள்விக்குறியாய்…
மண் இலட்சத்தின் துணையோடு
விண்பார்க்குது
உலகமயமாக்கத்திற்கு
உயிர் கொண்டுழைத்தவன்
படையலா? தகவல் தொழில் நுட்பம்
கணினிகளில் பவனி வர
தொழில் வளர்ச்சியெனும் ஊடகத்தில்
தாரை வார்க்கப்படுகிறது
நமது பாரம்பரியத்தின் உயிர் தொடர்ச்சி
நிலங்களா இவை!
எம் மூதாதையர்களின்
குருதியும் சதையும்
சேர்ந்துழைத்த வியர்வைத்
துளிகளின் உரமேறிய வரலாற்றுத்
தடங்கள்!

இன்று இவை தொலைக்காட்சிப்
பெட்டிக்கும் செல்லிடம் பேசியிலும்
ரெண்டு நாலது…
வாகனமேறித் தொலைந்து போகிறதே!
தமிழா!
உனது இனம் உலக அரங்கினில்
அனாதையாய்த் தவிக்க
மரபென்னவோ
ஆயிரம் ஆயிரம்
கதைகள் சொல்லும்
வெறும் வண்ணப்பெட்டியின் முன்
பொங்கல் கவியரங்கம்
கேட்கவா நீ வாரிசானாய்
மஞ்சளுக்கு கரும்புக்கும்
நெல்லுக்கும்…
உயிர்கொடுத்த அந்த
பாட்டன் பூட்டன் வாரிசே !
கள்ளெனும் சூரியனாய்க் கிளம்பு
பொழுது விடியும் !

# மாநிலங்களும் ஒன்றியமும்

- முத்து முருகன்




பொதுவாக இத்துணைக் கண்டத்தின் வரலாற்றை எழுதி யவர்கள் அனைவரும் இந்தியா என்ற சொல்லைக் கையாண்டுள்ளனர். அரசியல் அமைப் பும் மாநிலங்களின் ஒன்றியம் இந்தியா பாரத் என்றழைக்கப்படும் எனச் சொல்கின்றது. வரலாற்றில் நாவலந் தீவு என்றும் சொல்லப் பட்டிருக்கின்றது. ஆங்கிலேயன் மெட்ராசு, கல்கத்தா, பம்பாய் என்ற மூன்று மாநிலங்களை உண்டாக்கி பிரிட்டிஷ் இந்தியா என்று ஆரம்பத்தில் அழைத்தான்.

ஆனால் நாம் வரலாற்றை நமது இலக்கியத்தில் மூலமாக அறியும் பொது சோழ பாண்டிய சேர முடியரசுகளாகவும் சீறூர் தலைவன் மன்னன் எனவும் பார்க்க முடிகிறது. மேலும் நமது வரலாறு வரலாற்று வழியில் அறிய முடிகின்றது. தமிழ் சமூகம் வரலாற்று வழியில் பல கட்டங்களை கடந்து வந்ததையும் பண்பாட்டில் வளர்ச்சிதை மாற்றங்களுடன் நடந்துள்ளதை பல வரலாற்று பேராசிரியர்கள் எழுதியுள்ளனர். ஆக இந்த நாவலந் தீவு ஒரு ஒற்றையாட்சி எனும் நடைமுறைக்கு ஆங்கிலேயன் வழி வந்துள்ளதை வரலாறு படிக்கும் யாரும் தெரிந்து கொள்ளலாம். நவீனத்தின் வரவே இதை உருவாக்க அடிப்படையாக அமைந்தது. அது மட்டுமல்லாமல் மக்களுடைய நாடுகளில் உருவானதை இங்கு மெல்ல மெல்ல ஆங்கிலேயனால் புகுத்தப்பட்டதே வரலாறு.

ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி முடிவுற்று பிரிட்டிஷ் பாராளுமண்டதுடன் அவனால் உருவாக்கப்பட்ட பிரிட்டிஷ் இந்தியா இங்கிலாந்து பாராளுமன்றக் கட்டுப்பாட்டில் வந்தது. இங்கிருந்த முன்னேறிய வகுப்பு மெல்ல மெல்ல சட்டபூர்வமான வழிகளில் தங்களை அமைப்பாக்கிக் கொண்டு வந்தன. ஆங்கில அதிகாரி ஒருவனால் இது கவனிக்கப்பட்டதுடன் அவனே முன்வந்து உருவாக்கியதுதான் இந்தியா தேசிய காங்கிரஸ், இவ்வமைப்பு மெதுவாக ஆங்கில ஆட்சியுடன் தனது கோரிக்கைகளை வைத்து நிறைவு செய்து கொண்டன. இந்த அமைப்பு மிதவாத தீவிரவாத ஆட்சிகளுடன் பயணித்து வந்தது. முடிவில் 1947ல் தனது அதிகாரத்தை சுதந்திரம் என்ற பெயரில் பெற்றுக் கொண்டது. முஸ்லீம்களும் சமகாலத்தில், தங்களை அமைப்பாக்கிக் கொண்டு காங்கிரசுடனும் தனித்தும் சேர்ந்தும் தனது நடவடிக்கைகள் மூலம் தனி நாடு அடைந்தது. வரலாற்றில் மொழி வழி தேசம் அதாவது மாநிலம்



அமைக்க இங்கொன்றும் அங்கொன்றுமாக கோரிக்கைகள் எழுந்தன. அவை கண்டு கொள்ளப்படவில்லை. ஏன் காங்கிரஸ் தனது கட்சி அமைப்புகளான மொழி வழியிலே பின் நாட்களில் அமைத்துக் கொண்டது வரலாறு.

இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு நான் மட்டுமே பிரதிநிதி என காங்கிரசும் காந்தியும் கொண்ட உரிமையானது அனைத்து மொழி வாழ் மக்கள் தங்களுக்கென ஒரு தேசம் அமையாத நிலை எய்தினார். இவர்கள் அனைவருக்கும் பொது எதிரியாக இருந்தது ஆங்கில ஏகாதிபத்தியமே. ஆனால் வளர்ந்து வந்து கொண்டிருந்த வட இந்தியா வணிக தரகர்கள் பொருள் உற்பத்தியிலும் பங்கு கொண்டனர். இது 1825 வாக்கிலே நடக்கத் துவங்கியது. இவர்கள் புதிய உற்பத்திப் பொருட்களை இந்தியாவெங்கும் பரப்பவும் வணிகர்களாகவும் வளர்ந்து வரும் புதிய வங்கித் தொழிலில் சார்பாளர்களாகவும் ஆங்கிலேயனுக்கு தேவைப்படும் கச்சாப் பொருள் சேகரிக்கும் தரகர்களாகவுமே இருந்தனர். இவர்களே பின் நாட்களில் தொழில் முதலாளிகளாக உருவாகினர்.

இவர்கள் ஆங்கில முதலாளிகளுடன் மோதல் போக்கையும் உறவாடியும் தங்களை வளர்த்துக் கொண்டனர். இவர்களே காங்கிரஸ் கட்சியின் திசை வழியைத் தீர்மானித்தனர். உள்நாட்டில் தங்களை இந்துக்களின் பிரதிநிதியாகவும் விடுதலை வேட்கை உடையவர்களாகவும் மக்களின் போராட்டங்களுக்கு தலைமை ஏற்கும் பாத்திரத்தை மிகத் திறமையாக காங்கிரசை தங்களின் முகமாக்கினர்.

இவர்களின் உள்நாட்டுப் பங்காளியான முஸ்லீம் வகுப்பாரது அச்சத்தை மோதலாக்கி இந்த நிலப் பரப்பிற்கு தீராத தலைவலியையும் உண்டாக்கினார். மக்களது போராட்டங்களுக்கு தலைவணங்கி ஆங்கிலேயன் தவணை முறையில் அதிகாரங்களை பரவலாக்கி முடிவில் 1935 அரசியல் அமைப்புச்சட்டத்தை உருவாக்கினான். இதில் தனது நலனை மிக எச்சரிக்கை உணர்வுடன் பாதுகாத்துக் கொண்டான், தனது கடந்த கால அனுபவங்களை கொண்டு இந்த துணைக்கண்டம் தனது கட்டுப்பாட்டில் என்றென்றும் இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வுடன் உருவாக்கிய இதே சட்டங்களை தங்களது நலனுக்கு ஏற்ற வகையில் 1950ல் இந்திய அரசியல் அமைப்புச்சட்டமாக்கிக் கண்டதே இந்தியப் பெருமுதலாளிகளது வெற்றி. இதை காங்கிரஸ் கொடுத்து போராடிய மக்களுக்கு இன்று வரை சரியான மாற்று கிட்டவில்லை.

இன்று இருக்கக் கூடிய சிக்கல்கள் ஏராளம். ஆனால் ஆளுநருக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் நடக்கும் போராட்டங்கள் தேவையா? இந்த அதிகாரக் குவியல் எப்படி ஒன்றியத்திற்கு கிட்டியது? ஒரு துணைக் கண்டத்தை ஒற்றைத் தன்மையுடனே பார்க்கும் போக்கு யாரால் ஏற்கப்படுகிறது? அனைத்து மொழிவழி மக்களுக்கும் தங்களது இறையாண்மையுடன் ஒரு கூட்டமைப்பில் செயல்படாது போவது எப்படி?

இந்த கேள்விக்கு விடை வடநாட்டு பெரு முதலாளிகள் இந்தியாவை தங்களது நலத்திற்காக இடமாக பார்த்து நாடு விடுதலை அடைந்தாலும் தங்களது நலன்கள் பாதிக்காத வகையில் குடியரசு ஆட்சியை அமைத்து கொண்டனர். இதற்கு ஏற்றார் போல் இந்தியா அரசியல் அமைப்பும் அமைக்கப்பட்டது. இதை வரும் தொடர்களில் பார்ப்போம்.

-தொடரும்

# இறையூர் மலமும் சாதி, மதத் தப்பெண்ணங்களும்

## -பாரி

### அதிகார வர்க்க அத்துமீறல்

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், முத்துக்காடு ஊராட்சியில் இறையூர் வேங்கைவயல் சிற்றூரில் பட்டியலின (பறையர்) மக்களின் குடிநீர்த் தொட்டியில் மலம் கலந்த குற்றவாளிக்கும்பல் சாதி, மத அரசியலில் அடைக்கலம் தேடியுள்ளது. இது தமிழ் நாட்டின் அரசியல் களத்தில் சாதி, மத வெறிக்கும்பல் ஒரு புறமும், புரட்சிகர, சனநாயக ஆற்றல்கள் மறுபுறமும் அணி வகுக்கக் காரணமாகிவிட்டன. தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரசு ஆகியன எப்போதும்போல சந்தர்ப்பவாத நிலையெடுத்துள்ளன.

தொலைக்காட்சி செய்திகள், சமூக வலைதளங்கள், வெவ்வேறு சாதி மக்களிடையே கண்ட பேட்டிகள், காவல்துறையின் ஒரு சார்பான விசாரணை தோரணைகள், சுற்றுப்புறச் சாட்சிகள் ஆகியவற்றினைப் பகுத்தும் தொகுத்தும் ஆராய்ந்தால் குடிநீர் தொட்டியில் மலம் கலந்தது ஊராட்சி மன்றத் தலைவர் பத்மாவின் கணவர் முத்தையா கும்பல் என்பதை உறுதி படுத்துகிறது. எனவே முத்தையா கும்பலும் அவர்களுக்கு உடந்தையான அதிகார வர்க்கமும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும். முத்தையா முத்தரையர் சாதி ஆவார் . முத்துக்காடு ஊராட்சி மன்றத் தலைவர் பத்மா. அவரது கணவர் முத்தையாதான் உண்மையான தலைவர். முத்தையா முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவராகவும் இருந்துள்ளார். முத்தையா ஊராட்சி மன்றத்தில் பல்வேறு முறை கேடுகளில் ஈடுபட்டு ஊழல் புரிந்துள்ளார் என கிராமசபைக் கூட்டத்தில் தெரியவருகிறது. ஆகையினால் இதனைப் பட்டியலின மக்கள் அதிகாரிகளிடம் கணக்கு கேட்டுள்ளனர். முத்தையாவின் முறைகேடுகளை தண்ணீர்த் தொட்டியின் முன்னாள் ஆப்ரேட்டர் முத்தரையர் சண்முகம் வெளிக்கொண்டு வந்துள்ளார். அதனால் சண்முகம் அப்பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் சண்முகம் பணியில் சேருவதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். அவருக்குத் துணையாக பட்டியலின மக்கள் இருந்துள்ளனர். எனவே பழிவாங்கும் நோக்குடன் முத்தையா கும்பல் தண்ணீர் தொட்டியில் மலம் கலந்துள்ளது எனத் தெரியவருகிறது.

புதுக்கோட்டை மாவட்ட அதிகார



வர்க்கம் தண்ணீர்த் தொட்டியில் மலம் கலந்தது யார்?எனக் கண்டறிவதோடு நின்றிருக்க வேண்டும். மாறாக இரட்டைக்குவளை முறை ஒழிப்பு, கோவில் உரிமை மீட்பு போன்ற முரண்பாடுகளைக் கையாண்டதால் முத்தையாக் கும்பல் சாதி, மத அரசியலில் எளிதில் தஞ்சம் அடையக் காரணமாகிவிட்டது. இரட்டைக் குவளை முறை ஒழிக்கப்பட வேண்டும், கோவில் உரிமை மீட்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அதே நேரத்தில் பல்வேறு முரண்பாடுகளை ஒரே நேரத்தில் கையாள்வது தவறு. பொதுவாகவே, உடமை வர்க்கம், அதிகார வர்க்கம், குற்றவாளிகள் ஆகியோர் தவறு இழைத்துவிட்டு சாதி, மதத்திற்குள் ஒழிந்துகொள்வது வழக்கம். அதுபோலவே முத்தையா கும்பலும் அவர்களுக்கு உடந்தையான அதிகார வர்க்கமும் தாங்கள்

தப்பித்துக்கொள்ள அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாட்டில் அன்றாடம் நடைபெறும் குற்றச் செயல்களில் ஏதோ ஒரு சாதியைச் சேர்ந்தவர் குற்றமிழைத்து சிறைக்குச் செல்கிறார். அந்த குற்றவாளிக்காக அவரது சாதியினர் முன்வருவதில்லை. அதே நேரத்தில் குற்றமிழைத்த முத்தையா கும்பலுக்குத் துணையாக சாதிச் சங்கங்கள் வரிந்து கட்டிக் கொண்டு முன்வருவதேன்?. புதுக்கோட்டை மாவட்ட அதிகார வர்க்கம் மலச்சிக்கலை சாதிய சிக்கலாக மாற்றியதே இதற்கான விடையாகும்.

ஒரு சமூகத்தில் பல்வேறு முரண்பாடுகள் நிலவியபோதும் எல்லா முரண்பாடுகளையும் ஒரே நேரத்தில் தீர்க்க எல்லா வர்க்கங்களும், சாதிகளும் இடம் கொடுப்பதில்லை. ஒரு நேரத்தில் முன்னுக்குவரும் குறிப்பிட்ட முதன்மையான முரண்பாட்டை தீர்த்து தான் சமூதாயம் படிப்படியாக முன்னேற இயலும். ஒரு குறிப்பிட்டமுரண்பாட்டின் எதிர் எதிர் கூறுகளின் வர்க்க அல்லது சாதிய அணி வகுப்பின் சமநிலை மாறுகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். (எ.கா) தேசிய விடுதலைக்கும், சோசலிசத்துக்குமான போராட்டத்தில் வர்க்க அணி வகுப்புகள்மாறும். அதுபோல இரட்டை குவளை முறை ஒழிக்க வரும் வர்க்கங்கள், சாதிகள் கோவில் உரிமை மீட்பதில் எதிரெதிர் நிலைக்குச் செல்லக் கூடும். குறிப்பான நிலைமைகளை ஆய்வு செய்வதன் மூலமே முடிவுக்கு வரவேண்டும்.

இறையூர்-வேங்கைவயல் கிராமத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் கிராமங்கள், நகரங்கள், அரசாங்கங்கள் (Governments) அரசு (State) அலுவலகங்கள், கட்சிகள் அனைத்திலும் ஏதோ ஒரு வடிவத்தில் தீண்டாமை கடைபிடிக்கப்படுகிறது. ஒரு சாதி பிற சாதி மீதும், அனைத்துப் பெண்கள் மீதும் தீண்டாமை கடைபிடிக்கப்படுகிறது. படிவரிசை முறையில் எல்லோருக்கும் கீழ் நிலையில் தாழ்த்தப்பட்டோரும் பெண்களும் உள்ளனர். தேசியக் குற்றப் பதிவுத்துறைக் குறிப்புகளின்படி ஒவ்வொரு 16 நிமிடத்துக்கும் தலித் (தலித் என்ற மராட்டிய சொல்லுக்கு குழைந்து போனவர்கள், சிதறடிக்கப்பட்டவர்கள் என்று பொருள்) ஒருவருக்கு எதிராக தலித் அல்லாதவரால் குற்றமிழைக்கப்படுகிறது. ஒவ்வொருநாளும் நான்கு தீண்டப்படாத பெண்கள் தீண்டப்படுவோரால் கற்பழிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு கிழமையும் 13 தலித்துகள் கொல்லப்படுகிறார்கள், ஆறு தலித்துகள் கடத்தப்படுகிறார்கள். 2012 இல் மட்டும் தில்லியில் 23 வயது நிரம்பிய பெண் கூட்டாக கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட அந்த ஆண்டில் மட்டும் 1,574 தலித் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள், 651 தலித்துகள் கொல்லப்பட்டனர். (தலித்துகளுக்கு எதிரான கற்பழிப்புகளில் அல்லது ஏனைய குற்றங்களில் 10 விழுக்காடு மட்டுமே பதிவு செய்யப்படுகிறது என்பது பட்டறிவு). இந்த கணக்கில் அடங்குபவை கற்பழிப்புகளும், சித்திரவதைகளும் மட்டுமே. உடையவிழ்த்து அம்மன ஊர்வலம் நடத்துதல்,மலமுண்ணச் செய்தல்,நில அபகரிப்பு, சமூக ஒதுக்கல், குடிநீர் கிடைக்கவிடாது தடுத்தல் ஆகியவை அடங்குவதில்லை. மசாபி தலித் சீக்கியர் ஒருவர் தன் மகளைக் கூட்டாகக் கற்பழித்தோருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யத் துணிந்ததற்காக 2005 இல் அவரது இரு கைகளும் ஒரு காலும் துண்டிக்கப்பட்ட செய்தி இந்தப் புள்ளி விவரங்களில் அடங்கவில்லை என்கிறார் பஞ்சாபை சேர்ந்த பந்த சிங். மராட்டிய மாநிலத்தில் கைர்லாஞ்சி கிராமத்தில் சுரேகாவும் அவரது மகன்கள், மகள் நால்வரும் கொடும் சித்தரவதைச் செய்யப்பட்டு சாதி ஆதிக்கவாதிகளால் கொல்லப்பட்டனர். இதற்கு காவல்துறை, ஊடகத்துறை, நீதித்துறை, ஆளும் மற்றும் எதிர்கட்சிகள் அனைத்தும் துணைநின்றன. தமிழ்நாட்டில்1968-இல் கீழ்வெண்மணியில் தொடங்கி வேங்கைவயல் வரையிலும், இதற்கிடையே முதுகுளத்தூர், ஊஞ்சனை, கொடியன்குளம், காலப்பட்டி, மீனாட்சிபுரம், உத்தமபுரம், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம், கொட்டக்கச்சியேந்தல், தாமிரபரணி, கண்டதேவி, திண்ணியம், நாயக்கன் கொட்டாய், குண்டுப்பட்டி, வாச்சாத்தி, பரமக்குடி என்று தமிழ்நாட்டை உலுக்கிய நிகழ்ச்சிகளில் சாதி ஆதிக்கவாதிகளும், ஆட்சியாளர்களும், போலீசும், நீதிமன்றமும், செய்தி ஊடங்களும், பட்டியலின மக்கள் மீது தனித்தனியாகவோ, ஒன்றிணைந்தோ நடத்திய வன்முறைகளைப் பட்டியலிட்டால் இச்சிறு கட்டுரையை மீறுவதாக அமையும். 'காலத்தின் தேவை தாழ்த்தப் பட்டோருக்கான இரட்டை வாக்குரிமை என்ற தலைப்பிலான கட்டுரை 2012 புரட்டாசி தமிழ்த் தேசம் இதழில் எழுதினேன் 'கிராமங்கள் அமைதியாக உள்ளதென்றால், தாழ்த்தப்பட்ட மக்கள்

சமத்துவ உரிமைக்காகப் போராடத் துணிவில்லாமல் இருப்பதே. குடியுரிமை என்பது ஒருவரது வேலை, வாழும் பகுதி, தனது துணையைத் தேர்வு செய்வதைக் குறிப்பதாகும். இக்குடியுரிமை குறித்து தாழ்த்தப்பட்டவர் ஒரு கிராமத்தில் பேசி விட்டு உயிருடன் திரும்ப இயலுமா என எண்ணிப் பார்க்க அச்சமாக உள்ளது'' என்று. அருந்ததிராய் சொல்வதுபோல ''சனநாயகம் நாட்டின் சாதி அமைப்பை அழித்துவிடவில்லை. அதனை உறுதிபடுத்தி நவீனமாக்கியுள்ளது.''

இந்தியாவைத் தவிர்த்து உலகின் வேறு எங்கேயாவது இது போன்ற நிகழ்வுகள் நடந்தால் பெரும் வன்முறை வெடிக்கிறது. ஆனால் இங்கு எளிதாக கடந்து போகிறோம். ஏன்?. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்ற சனநாயகத்திற்கு எதிரான பார்ப்பனியம் (இந்துத்துவம்) உருவாக்கிய சாதிய உளவியலே ஒவ்வொரு மனிதனிலும் இயங்குகிறது. ஒவ்வொரு கிராமங்களிலும் ஒவ்வொரு சாதிக்குமான நடைமுறைகள் உள்ளன. அதனை மீறுவது குற்றமாகும். மீறுகின்றவர்கள் தண்டிக்கப் படுகின்றனர். அப்படி தண்டிப்பது சரியென ஒவ்வொருவரும் கருதுகின்றனா;. எனவே இங்கே சமத்துவ சனநாயகத்திற்கு இடமில்லை. இந்தியாவின் அரசியல் அமைப்புச்சட்டம் நீதி மன்றங்களில் விவாதிக்கப்படுகிறதே ஒழிய அரசு அலுவலங்களில் காவல்துறையில் கிராமங்களில் பேச இயலாது. மீறினால் ஏதோ ஒரு வழியில் தண்டிக்கப்படுவர். கிராமப்புறங்களில் மரபு வழியாக வந்த எழுதப்படாத சாதியச் சட்டங்களே செயல்படுகின்றன. சொல்லப்படும் இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு மரபு வழியாகப் பெற்ற காலனிய அரசு (State) அதிகார வர்க்கம் கலைக்கப்பட்டு ஜனநாயகப்படுத்தி இருக்க வேண்டும். அது செய்யாததன் விளைவு அரசு அலுவலங்களில் சட்டத்திற்குப் புறம்பான மரபு வழியாக பெற்ற எழுதப்படாத அதிகாரவர்க்க நடைமுறையே உள்ளது. மேல்படிக்கட்டில் உள்ள சாதிகள் கீழ்படிகட்டில் உள்ள சாதிகளை ஒடுக்குவதற்கும், உடமை வர்க்கம், அதிகார வர்க்கம் ஆகியனவற்றின் அத்து மீறல்களைத் தடுப்பதற்கும் இந்துத்துவம்வர்க்க ஒற்றுமைக்குத் தடைபோடுகிறது. இந்துத்துவம் அனைத்து சாதியிலுமுள்ள உழைக்கும் மக்களுக்கு வறுமையும் சாதிய பெருமிதங்களையும், உடமை வர்க்கம், அதிகார வர்க்கம் ஆகியனவற்றிற்குச் சொர்க்கத்தையும் வழங்குகிறது என்றால் மிகையல்ல. ஐரோப்பாவில் ஜனநாயகத்திற்கானப் போராட்டம் நில உடமை வர்க்கம், அதிகாரவர்க்கம் இவ்விரண்டையும் பாதுகாத்த கிறித்துவத்தையும் எதிர்த்து போராட வேண்டியிருந்தது. இந்தியாவில், தமிழ்நாட்டில் சனநாயகத்திற்கான போராட்டம் பன்னாட்டு, உள்நாட்டு பெருமுதலாளிகளையும், பெரும் நில உடமையாளர்களையும், இவர்களுக்கு தொண்டூழியும் செய்யும் அதிகார வர்க்கத்தையும், இவ்வர்க்கங்களுக்கு ஆதரவான மெய்யியலை (Philosophy) வழங்கும் இந்துத்துவத்தையும் எதிர்த்துப் போராட வேண்டி இருக்கிறது.

## இறையூர் மலமும்
## ஆண்ட அடிமைச் சாதிகளும்

வேங்கைவயல் குடிநீர்த் தொட்டியில் முத்தையா கும்பல் மலம் கலந்ததை ஒட்டி தமிழ்நாட்டிலுள்ள சாதிய அமைப்புகள் ஊழல் பெருச்சாளி முத்தையாவுக்கு துணை நிற்கின்றன. அத்துடன் தாங்கள் ஆண்ட பரம்பரை என மார்த் தட்டிக் கொள்கின்றன.

தமிழ்நாட்டில் ஆண்ட சாதிகள் யார்?. அரசனது வரலாற்றையே உழைக்கும் மக்களது வரலாறாகப் பார்க்கும் கீழ்தரமான மனோபாவம் இன்றும் தமிழ்நாட்டில் நீங்கவில்லை. அதனால் தாங்கள் ஆண்ட பரம்பரை எனத் துள்ளிக்குதிக்கின்றனர். அவர்களைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது.

இந்தியாவின் வட பகுதியில் பிராமணன், சத்திரியன், வைசிகன் என்ற சாதிகள் ஆண்ட சாதிகளாகவும், சூத்திரர்கள் அடிமைச் சாதிகளாகவும் இருந்துள்ளனர். தலித்துகள் புறச்சாதிகளாக (Out Caste) இருந்தனர். அதாவது (வர்ணமற்றவர்களாக - அதர்வர்ணத்தினராக)சாதியற்றவர்களாக இருந்தனர். தமிழ்நாட்டில் அரசன், அந்தணன், வணிகன், வெள்ளாளன் ஆகியோர் ஆண்ட சாதிகளாகவும் மற்றவை அடிமை சாதிகளாகவுமே இருந்துள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்கள் அடிமை நிலையுடன் கூடுதலாக தீண்டாமைக்கு ஆட்பட்டனர். அரசன் என்ற ஒரு சாதியே தமிழ்நாட்டில் இல்லை. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் பண்ணையார்கள் சாணிப்பால், சவுக்கடி தண்டனையை எல்லாச் சாதிக்காரர்களுக்கும் கொடுத்தனர். தாழ்த்தப்பட்ட மக்கள் கூடுதலாக தீண்டாமையைச் சுமந்தனர். இன்றைக்கு எல்லா

சாதியிலுள்ள உழைக்கும் மக்கள் மீது அரசியல், பொருளாதார, பண்பாட்டு ஒடுக்குமுறை இருக்கிறது. கூடுதலாக தாழ்த்தப்பட்டோர் மீதும், பெண்கள் மீதும் தீண்டாமை இருக்கிறது.

தமிழ்நாட்டில் அனைத்து சாதிகளிலுமுள்ள உழைக்கும் மக்கள் மீது உடமை வர்க்கம் எவ்வாறெல்லாம் ஒடுக்குமுறை செலுத்தியது, செலுத்தி வருகிறது என்பதற்கான விவரங்களை சுமார் 300 ஆண்டுகால வரலாற்று நிகழ்வுகளிலிருந்து காட்டுகிறேன். பள்ளிப்பாடங்கள், உடமை வர்க்க ஊடகங்கள், உடமை வர்க்கம், அதிகார வர்க்கம்ஆகியன மன்னர்களது வரலாற்றையே மக்களது வரலாறாக காட்டுகின்றன. அதனால் ஒவ்வொரு சாதியிலுமுள்ள உழைக்கும் மக்கள் பட்ட, படுகின்ற துன்பங்கள் மறைக்கப்படுகின்றன. எப்பொழுதெல்லாம் சாதிய வன்முறை, ஒடுக்குமுறை நிகழ்கிறதோ அப்பொழுதெல்லாம் சாதிகளுக்கு இடையில் இரத்தத் தூய்மை பேசப்பட்டு இளைஞர்கள் உசுப்பேற்றப் படுகிறார்கள். ஆகவே முதலில் சாதிகளுக்கு இடையிலான இரத்தத் தூய்மையை பார்த்துவிட்டு அடுத்து உழைக்கும் மக்கள் பட்ட, படுகின்ற துன்பங்களைப் பார்ப்போம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் தற்போது இருக்கின்ற பல்வேறு மொழிகள், இனங்கள், பழங்குடிகள், சாதிகள், மதங்கள், தேசிய இனங்கள் ஆகியவற்றிலுள்ள மக்கள் அனைவருமே பூர்வகுடிகள் அல்ல, வந்தேறிகளே. இதனை கடலால் கொள்ளப்பட்ட குமரிக்கண்டம் ஆய்வும், மரபணு ஆய்வும் உறுதிபடுத்துகின்றன. லெமூரியக் கண்ட ஆய்வானது அழிந்து போன குமரிக் கண்டத்திலிருந்து ஹோமோசேபியன் (அறிவு மனிதன்) என்ற ஆதி முதல் மனிதன் தோன்றி உலகம் முழுவதும் பரவினான் என்கிறது. இதனை டார்வினும், ஹெக்ஸ்லி ஆகிய அறிஞர்களும் எங்கெல்சும் ஆதரித்தனர். இன்றைய மனிதனுக்கும் குரங்குக்கும் மூதாதையர் ஒன்றே என்பது டார்வினின் பரிணாமக் கொள்கையாகும். மரபணு ஆய்வானது ஆப்பிரிக்காவிலிருந்து ஆதி முதல் மனிதன் தோன்றி அவன் உலகம் முழுவதும் பரவியதாகக் கூறுகிறது. மரபணு ஆய்வு துல்லியமானது. தமிழ்நாட்டின் கீழடி ஆய்வு இவ்விரண்டில் எதனை உறுதி படுத்தப்போகிறது என்பது ஆய்வின் முடிவில் தெரியவரும். தொல்லியல், மரபணுவியல், கடலியல், மொழியியல், விலங்கியல், தாவரவியல் உள்ளிட்ட ஆய்வுகள் அனைத்தும் காட்டுவது இந்தியத் துணைக் கண்டத்தின் முதல் குடிகள் அல்லது பூர்வ குடிகள் தமிழர்களே. இதனை அம்பேத்கரும், மேற்கு வங்க முதல்வராய் இருந்த ஜோதிபாசும் உறுதிபடுத்தினர். தமிழர்களுக்குப் பிறகுதான் தென்கிழக்காசியா-விலிருந்தும், அடுத்து மத்திய ஆசியாவிலிருந்தும் (ஆரியர்கள்) அதற்கடுத்து நாடு பிடிக்கவும், வணிகம் செய்யவும் வந்தவர்கள். இப்படி மரபினமாக, பழங்குடிகளாக வந்தவர்கள் தான் இந்தியத் துணைக் கண்டத்தில் தேசிய இனங்களாக வளர்ந்துள்ளனர். இத்தேசிய இனங்களின் மூதாதையர் ஒன்று அல்ல. பல மரபினங்கள், பழங்குடிகளின் கலப்பால் உருவானவர்களே. எனவே இந்தியத் துணைக் கண்டத்தில் மரபணுக் கலப்பில்லாத, இரத்தக் கலப்பில்லாத குடிகள், சாதிகள், மதங்கள், இனங்கள் என்று தூய வடிவில் ஏதுமில்லை. இந்தியாவில், தமிழ்நாட்டில் ஒருதாய் வயிற்றுபிள்ளைகள் பல வண்ணங்களில் பிறப்பது இதற்குச் சான்று.

இனி எல்லாச் சாதிகளிலுமுள்ள உழைக்கும் மக்கள் பட்ட, படுகின்ற துன்பங்களைப் பார்ப்போம்.

தமிழ்நாட்டில் அரசர்கள் ஆண்டபோது விவசாயத்தில் ஆறில் ஒரு பங்கு வரி கொடுக்கும் முறையும், அதற்கு ஈடாக அரசன் பாசன வசதி செய்து கொடுப்பது என்ற முறையும் இருந்தது. கிழக்கிந்தியக்கம்பெனி மற்றும் பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆட்சியில் இந்த நில உடமை உறவானது முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியால் 1739 இல் வங்காளத்தில் கொண்டு வரப்பட்ட சாசுவத நிலவரித் திட்டம் 1802 ஆம் ஆண்டுக்குப் பிறகு சென்னை மகாணத்திற்கும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் படி அரசுக்கும் மக்களுக்கும் இடைத்தட்டுப் பகுதியினராக சமீன்தார், இனாம்தார், இரயத்துவாரி நில உடமையாளர்கள் உருவாகக் காரணமாகியது. தமிழ் நாட்டின் நிலம் அனைத்தும் இவர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. பல ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு இவர்கள் உடமையாளராக மாறினர். இவர்கள்தான் ஆங்கில ஆட்சி ஒன்றுபட்ட இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் வேரூன்ற உதவி செய்தனர்.

ஆகையினால் இவர்களுக்கு ஆங்கில அரசு பட்டங்களும், பதவிகளும் கொடுத்து மரியாதை செய்தது. இந்த இடைத்தட்டு நில

உடமை வர்க்கத்தால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் எல்லாச் சாதிகளிலும் உள்ள உழைக்கும் மக்களே.

ஆங்கிலேயர் சாசுவத நிலவரிமுறை மூலம் மக்களிடமிருந்து வாங்கும் வரியில் மூன்றில் இருபங்கை அரசு கருவூலத்தில் கட்டவேண்டும். அதாவது சமீன்தார்கள் தம்பகுதிலுள்ள விவசாயிகளிடம் ஆண்டிற்கு 74 இலட்சம் ரூபாய்தான் வசூலிக்க வேண்டும். அதில் 49 இலட்சம்ரூபாய் அரசு கருவூலத்தில் கட்ட வேண்டும். மீதம் 25 இலட்சம் ரூபாய் சமீன்தார்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். அரசு கருவூலத்தில் கட்டும் வரிக்கு ‘பேஷ்குஷ்'' என்று பெயர். 25 இலட்சம் ரூபாய் மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டிய சமீன்தார்கள் 1938-ஆம் ஆண்டு கணக்கின்படி, விவசாயிகளிடமிருந்து 254 இலட்சம் ரூபாய் வசூலித்து அரசுக்கு 49 லட்சம் ரூபாய் செலுத்திவிட்டு மீதி 205 இலட்சம் ரூபாயை எடுத்துக் கொண்டனர். மேலும் மரத்துக்கு, வீட்டுக்கு, புல்லுக்கு, கரும்புக்கு, நில பயன் பாட்டிற்கு, ஆடு,மாடு மேய்ப்பதற்கு, விறகு, தழை, இலைகளை வெட்டுவதற்கு என்று எல்லாவற்றிற்கும் வரி வசூலித்தனர். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நாடார் மற்றும் பிறசாதிப் பெண்கள் இரவிக்கை அணிவதற்கு முலை வரி அதன் அளவுக்கு ஏற்ப கட்டினர். வரி அதிகம் செலுத்த வேண்டிய காரணத்தினால் விவசாயிகள் சுகந்தை அடிப்படையில் ஐம்பது அல்லது நூறு ரூபாய் கடன் வாங்கி வரி செலுத்தினர். அக்கடனை அடைக்க வேண்டி ஒரே பண்ணையில் பண்ணையாளராகக் காலம் முழுக்க உழைத்ததோடு மட்டும் அல்லாமல், தன்னுடைய பரம்பரையினரும் உழைக்கும் கொத்தடிமை நிலைக்கு ஆளாயினர். அவர்கள் கொடுக்கும் இடம்,உணவு, உடை ஆகியவற்றைக் கொண்டே உழைக்கும் மக்கள் வாழ்க்கை நடத்தினர். ஆண் அடிமைகள் விவசாயத்திலும், மாடு மேய்ப்பதிலும்,பெண் அடிமைகள் வீட்டு வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் அதற்கு முன்பும் பஞ்சத்தின் காரணமாக தம்மைத்தாமே அல்லது குடும்பத்தையே விலைக் கூறி விற்றுக் கொள்ளும் வழக்கம் இருந்து. பண்ணையடிமைகளை நிலத்துடன் சேர்த்தோ குத்தகைக்கோ அன்பளிப்பாகவோ பண்ணையாளர்களால் விற்கப் பட்டனர். பெண்கள் குழந்தைகள் பாலியல் தொழிலுக்காக கூட விற்றுக்கொண்ட அவல நிலை இருந்தது. இன்றையக்கும் நகர்ப்புறங்களில் ஏழைப் பெண்களும், ஆண்களும் பாலியல் தொழிலில் ஈடுபடும் அவலம் நீடிக்கிறது. இதற்கு எந்தச் சாதியும் விதிவிலக்கல்ல. ஆனால் காதலுக்குத் தடை போடுகிறோம். இது முரண்பாடல்லவா? தமிழ்நாட்டிற்கு வந்த போர்த்துகீசியர், டச்சுக்காரர், பிரட்டிஷ்காரர் ஆகிய அனைவருமே அழகிய பல இளம் பெண்களை விலைக்கு வாங்கி அனுபவித்துவிற்றுவிட்டு சென்றுள்ளனர். உலகின் பெரும்பாலான நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்றால் தமிழ்நாட்டில் பல்வேறு காலக்கட்டங்களில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாகவும், இங்குள்ள உடமை வர்க்கத்தின் ஒடுக்கு முறை காரணமாகவும் வாழவழியின்றி வெளியேறியவர்களே. அதே நேரத்தில் சங்க காலத்தில் வணிகத்திற்காகவும் தமிழர்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் நில உடமை அடிமை முறைக்கும் வெளிநாடுகளில் நில உடமை அடிமை முறைக்குமான அடிப்படையான வேறுபாடு என்பது வெளிநாடுகளில் பண்ணையடிமை நில உடமையாரின் உடமை ஆவார். அதாவது நில உடமைக்கு பண்ணைடிமை மதிப்பு மிக்க சொத்து. ஆகையினால் தனது சொத்தை பராமரிப்பது என்ற பொருளில் பண்ணையடிமையின் உணவு, உடை, இருப்பிடம், அவர்களது உடல் நலம் ஆகியன அனைத்துக்கும் நில உடமையாளன் பொறுப்பேற்றுக் கொண்டான். எனவே பண்ணையத்தில் வேலை இருந்தாலும் வேலை இல்லாவிட்டாலும்,நாட்டில் பஞ்சம் ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் பண்ணையடிமை பட்டினி கிடக்க வேண்டியதில்லை. இந்தியா அல்லது தமிழ் நாட்டில் பண்ணையடிமை நில உடமையாளனின் சொத்தாக இருந்தபோதிலும் பண்ணையடிமை சுதந்திர மனிதனாக தனித்து விடப்பட்டான். பண்ணையடிமை தனக்கும் தனது குடும்பத்திற்கும் தேவையான உணவு, உடை, இருப்பிடம், உடல் நலம் ஆகிய அனைத்தையும் பண்ணையாரைச் சார்ந்திருந்த போதிலும் தானே தேடிக்கொள்ள வேண்டியிருந்தது. ஆகையினால் பண்ணையத்தில் வேலையில்லாத காலங்களில் பஞ்ச காலங்களில் பண்ணையடிமை பட்டினிக்

கிடக்க வேண்டி இருந்தது அல்லது கடன்பட வேண்டியிருந்தது. எனவே வெளிநாடுகளிலுள்ள பண்ணையடிமைகளைவிட தமிழ்நாட்டு, இந்தியப் பண்ணையடிமைகள் உணவுக்கும், இருப்பிடத்திற்கும், உடைக்கும் மிகவும் துன்பப் பட்டார்கள். பல்வேறு நோய்வாய்ப்பட்டு கவனிப்பாரின்றி இறந்து போனார்கள்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் அதற்கு முன்பாகவும் எல்லாச் சாதிகளிலுமுள்ள உழைக்கும் ஆண்களும், பெண்களும் பல்வேறு வறுமை சூழலின் காரணமாக தங்களையோ, தங்களது குடும்பத்தினரையோ விற்றுக் கொண்டார்கள் என்பதற்கான சில சான்றுகளையும், ஆட்சியாளர்களே பல பேர்களைப் பிடித்து அடிமைப்படுத்தினார்கள் என்பதற்கான சில சான்றுகளையும் காட்டுகிறேன்.

கி.பி.1374-ஆம் ஆண்டு வெள்ளாளன் அடிமைகள் மூவர் புலையடிமை எழுவர் ஆகிய பத்து அடிமைகளை வழங்கியமை குறித்த கல்வெட்டு திருச்சி வட்டத்திலுள்ள தாருகாவனேஸ்வரர் ஆலயவளாகத்தில் காணப்படுகிறது.

கி.பி.1431-ஆம் ஆண்டு கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையால் குமரிமாவட்டம் கொல்லத்தில் சேகரிக்கப்பட்ட ஓலைச்சுவடியில் வெள்ளாளன் மகன்களும், மகள்களும், பறையர்களின் மகன்களும், மகள்களும் அடிமைகளாக அன்பளிப்பு கொடுக்கப்பட்டனர்.

கி.பி.1743-ஆம் ஆண்டு பிரெஞ்சு அரசில் பணியாற்றிய ஒருவரது நாட்குறிப்பில் தரங்கம்பாடியில் வழிபோக்கர்களை ஏமாற்றி அழைத்து வந்து அயல் நாடுகளுக்கு நூற்றுக்கணக்கான பேர் மூன்று முறைக்கு மேல் விற்கப்பட்டுள்ளனர்.

கி.பி.1832-ஆம் ஆண்டு திருவையாறு பகுதியில் கள்ளர் சாதி ஒருவர் தான் வெள்ளாளர் சாதி என்று ஏமாற்றி தனது 7 வயது மகளை வெள்ளாளருக்கு திருமணம் செய்து கொடுக்கிறார். அப்பெண்ணை பூப்பெய்திய பிறகு அழைத்துக் கொள்ளலாம் என எண்ணி வெளியூர் வேலைக்குச் சென்றுவிட்டு சில ஆண்டுகள் கழித்து மாமானாரை வந்து கேட்ட போதுதனது மனைவி தஞ்சாவூர் அரண்மனைக்கு அடிமையாக விற்கப்பட்டதை அறிகிறார். அப்பெண்ணை மீட்க சென்னை மகாணத்திற்கு விண்ணப்பம் செய்கிறார். இந்த செய்தி மோடி எழுத்தில் உள்ளது. மோடி எழுத்து என்பது பிறருக்குத் தெரியாமல் கமுக்கமாக எழுத தஞ்சை மராத்தியர்கள் பின்பற்றிய முறை.



கி.பி.1842 ஆம் ஆண்டு சிதம்பரம் பிள்ளை மிராசு சொத்திழந்து பிழைக்க தஞ்சாவூர் வந்தபோது மிராசின் இருமகள்களை அடிமைகளைச் சேகரிக்க வந்தவர்கள் தஞ்சாவூர் அரண்மணைக்கு பிடித்து சென்றுவிடுகின்றனர். அவர்களை மிராசு மீட்க முயற்சித்த போது மிராசுவைஅடித்து தான் விற்றுவிட்டதாக பொய்யாக எழுதி வாங்கிக் கொண்டார்கள் அரண்மனை ஊழியர்கள். இதனை சென்னை மாகாணத்திற்கு விண்ணப்பம் செய்தும்தனது இரு மகள்களை மீட்க முடியவில்லை. வெள்ளாள மிராசுவின் கதியே அதோகதிதான் என்றால் மற்ற உழைக்கும் மக்களின் நிலையை எண்ணிப்பாருங்கள்.

கி.பி.1845 ஆம் ஆண்டு வலங்கைமானிலிருந்த பழனி படையாச்சி (வன்னியர்) மனைவி தனது பெண்ணை விற்கிறாள்.

கி.பி.1852 ஆம் ஆண்டு திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், நெடுஞ்சிலக்குடியில் 5 பள்ளர்கள் விற்கப்பட்டுள்ளனர். இன்றைக்கும் கொங்கு மண்டலத்தின் நில உடமையாளர்கள் எசமானக் கவுண்டர் என்றும், ஊர்க்கவுண்டர் என்றும் கூலிக்கவுண்டர் என்றும் பிரிந்துள்ளனர்.

மேலே கண்ட சான்றுகள் அனைத்தும் தாங்கள் ஆண்டபரம்பரை எனப் பீற்றிக் கொள்பவர்களின் பார்வைக்கே. தங்களது சாதி உழைக்கும் மக்கள் விற்கப்பட்டுள்ளனர் எனப் புரிந்து கொள்ளவே தவிர யாரையும் இழிவுபடுத்த அல்ல.

தமிழ்நாட்டில் பரவலாக பறையர்கள், பள்ளர்கள், சக்கிலியர்கள், வலையர்கள் பிற இடை சாதியினர் எளிதாக விற்கப்பட்டதற்கான சான்றுகள் நிறையவே உள்ளன. கட்டுரை நீளும் என்பதற்காக தவிர்த்துள்ளேன். தமிழ் நாட்டில்

சங்க காலத்தில் அந்தணர்கள் என்பவர்கள் பறையர்களாக இருக்கலாம் என்றும், அவ்விடத்தை தற்போதைய பார்ப்பனர்கள் பிடித்துக் கொண்டார்கள் என்றும் கருத இடமுள்ளது. அவை தனியாக ஆய்வு செய்ய வேண்டும்.

உசிலம்பட்டி அருகிலுள்ள பெருங்காமநல்லூர் நினைவுச் சின்னம் குற்றப் பரம்பரை என பிரான்மலைக் கள்ளரையும் பிற சாதிகளையும் ஆங்கிலேயர்கள் வகைப் படுத்திய வரலாற்றை நினைவு படுத்தவில்லையா? இவைகள் தான் ஒவ்வொரு சாதிகளிலும் உள்ள உழைக்கும் மக்களின் வரலாறு. இந்த அநீதிகளுக்கு எதிராக எந்த ஆண்டைகள் போராடினார்கள்? மாறாக வீரபாண்டிய கட்டபொம்மன், தீரன் சின்னமலை, வேலுநாச்சியார் உள்ளிட்ட போராட்டக் காரர்களை காட்டி அல்லவா கொடுத்தார்கள்?

## தாழ்த்தப்பட்டோர் யார்?

பொதுவான சமூக அறிவியலின் படி மனிதன் காட்டு மிராண்டி நிலையிலிருந்து நாகாரிக நிலைக்கு மாறிய போதும், உணவு சேகரித்தல் நிலையிலிருந்து உணவுக்கான உற்பத்தியில் ஈடுபட்டபோதும் மனிதர்கள் தனியாகவோ, குலங்களாகவோ, இனக் குழுக்களாகவோ அடிமைப்படுத்தப்பட்டனர். அவ்வாறு அடிமை பட்டவர்கள் உற்பத்தியில் ஈடுபடச் செய்து உபரி உற்பத்தியை ஆண்டைகள் கைப்பற்றினர். நில உடமை சமுதாயத்தில் வெற்றி பெற்ற மன்னர்கள் போரில் தோற்கடிக்கப்பட்ட மன்னர்களையும் அவர்களது வாரிசுகளையும் அடிமைப்படுத்தினர். இந்தியாவில் தமிழ்நாட்டில் பார்ப்பனியத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டோர் சிதறடிக்கப்பட்டு பிறகு அடிமைப்படுத்தப்பட்டனர். பார்ப்பனியம் சொல்வது போல பிறப்பிலேயே உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி கிடையாது. ஓரிடத்தில் நிலைபெற்று வாழமுடியாத சூழலில் உணவுக்காகவும், வாழிடங்களுக்காகவும் இடம் பெயர்ந்த ஒரே குலங்கள், ஒரே குழுக்கள், ஒரே மரபினங்கள் பல்வேறு சாதிகளாக திரிந்தனர். இந்த இடப்பெயர்வு இன்றும் நடைபெறுகிறது. வட இந்தியாவில் பிராமணன், சத்திரியன், வைசியன் என்ற தொழில் (வர்ணம்) முதலில் ஐந்து ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டதாகவும், பிறகு ஒரு தலைமுறைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், பிறகு வாரிசு முறைக்கு மாறியுள்ளதாகவும் அறிகிறோம். தேர்ந்தெடுக்கப்படாத அனைவரும் அடிமைகளாகவும் (சூத்திரர்), தீண்டப்படாதவர்களாகவும் (பஞ்சமர் அல்லது வர்ணமற்றவர்) வைக்கப்பட்டனர். பழந்தமிழ் நாட்டில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய தமிழர்களது திணை வாழ்க்கையில் இன்று இருக்கின்ற சாதிகள் இல்லை. எனவே சாதி என்பது இடையில் ஏற்பட்டதே. இச்சாதி என்பது உடமை வர்க்கத்தின் ஒடுக்குமுறைக் கருவிகளில் ஒன்று. உடைமை வர்க்கமும் அவர்களைப் பாதுகாக்கும் அதிகார வர்க்கமும் தங்களுக்கு எதிராக ஒவ்வொரு சாதியிலுமுள்ள உழைக்கும் மக்கள் ஒன்று திரளவிடாது பாதுகாக்கும் கருவியாக சாதி செயல்படுவதினால் அது பாதுகாத்து வளர்க்கப்படுகிறது. இதனை ஒவ்வொரு



சாதியிலுமுள்ள உழைக்கும் மக்கள் உணராதவரை தங்களது அவல வாழ்விலிருந்து ஒருநாளும் மீளப்போவதில்லை.

## சாதி, மதத் திமிர்

தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் (Area) ஏதோ ஒரு சாதி பெரும்பான்மையாகவும், ஏதோ ஒரு சாதி சிறுபான்மையாகவும் இருக்கின்றன. அவ்வூரில் பெரும்பான்மை சாதிக்கு பணிந்து சிறுபான்மை சாதியினர் வாழ்கிறார்கள். அது ஆதிக்க சாதியா அடிமைப்பட்ட சாதியா என்பதில்லை. அவ்வூரில் பெரும்பான்மை சாதித் தெருவில் சிறுபான்மைச் சாதியினர் செல்லும் போது ஒரு நாய் அடுத்த தெருவுக்குச் செல்லும் போது தனது வாலை கீழ்நோக்கி மடித்துச் செல்வது போல போகின்றனர். இடைப்பட்ட சாதியினர் வாய் பொத்தியே வாழ்கின்றனர். இந்நிலை மாற்றப்பட வேண்டும். அதாவது தமிழ்ச் சமுதாயம் சமூக நீதித் தமிழ்த் தேசமாக ஜனநாயகப் படுத்த வேண்டும்.


1991- ஆம் ஆண்டுக்குப் பிறகு தொழில்துறை, வேளாண்துறை, சேவைத் துறை ஆகியன அனைத்தும் பன்னாட்டு உள்நாட்டு பெரும் முதலாளிகளுக்காக விற்கப்படுகின்றன.சொல்லப்படும் இந்திய சுதந்திரப் போராட்ட காலக் கட்டத்தில் மக்கள் போராடிப் பெற்ற உரிமைகள் அனைத்தும் தேசத்தின் நலன், வளர்ச்சி, தற்சார்பு என்ற பெயர்களில் பறிக்கப்படுகின்றன. இது உண்மையில் அதானி, அம்பானி போன்ற வணிக முதலாளிகளுக்காகவும் (கார்பரேட்), பார்ப்பனிய மேலாதிக்கத்திற்காகவும் செய்யப்படுகின்றன. ஜம்மு காஷ்மீர் சிறப்புரிமை நீக்கம், முத்தலாக் தடைச் சட்டம், போக்சோ சட்டத் திருத்தம், மோட்டார் வாகனச் சட்ட திருத்தம், பசுவதை தடைச் சட்டம், 2005- தகவல் உரிமைச் சட்டத் திருத்தம், என்.ஐ.எ. சட்டத்திருத்தம், ஊதியங்கள் சட்டத்திருத்தம் குடியுரிமைச் சட்டத் திருத்தம், போன்ற மனித உரிமைகளுக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் 44 தொழிலாளர் சட்டங்கள் 4 ஆகத் தொடுக்கப்பட்டு வேலைப் பாதுகாப்பு, ஊதியப் பாதுகாப்பு, மருத்துவப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு சட்டங்கள் அனைத்தும் நீர்த்துப் போகச் செய்து எல்லா அதிகாரங்களையும் ஒன்றிய அரசு எடுத்துக் கொண்டுள்ளது. புதிய வேளாண் சட்டங்களால் விவசாயம் கார்பரேட்டுகளின் கட்டுப்பாட்டிற்குள் சென்றுவிட இருந்ததை விவசாயிகளது பேராட்டத்தால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. புதிய மின்சார சட்டங்களால் இலவச மின்சாரம் நீக்கப்படும். புதிய உணவுக் கொள்கைச் சட்டத்தால் ரேசன் கடைகள் மூடப்படும். புதியக் கல்விக் கொள்கையால் கல்வி பார்ப்பனியகார்பரேட் மயமாகியுள்ளது. இதன் மூலம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலின, பழங்குடி மக்களின் கல்வி உரிமை இட ஒதுக்கீடு, சமூக நீதி ஆகியன பறிக்கப்படுகின்றன. நீட் தேர்வுமுறை மருத்துவப் படிப்பு மட்டுமின்றி அனைத்து உயர் கல்விக்கும் என்று நீட்டியதால் ஏழை, எளிய மாணவர்களின் உயர்க்கல்வி வாய்ப்புகள் பறிக்கப்படுகின்றன. ஜி.எஸ்.டி வரி வதிப்பின் மூலம் தமிழ்த் தேசிய இனம் உள்ளிட்ட பிற தேசிய இனங்களின் வரி வருவாய் பறிக்கப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ்த் தேசிய இனத்தின் வரலாற்றைத் திரித்துப் புரட்டும் வேலையில் பாசிச மோடிக் கும்பல் ஈடுபட்டுள்ளது.

ரசியா மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட புரட்சிக்குப் பிறகு பிற நாடுகளில் ஏற்படப்போகும் புரட்சியைத் தடுக்கும் நோக்கில் கீன்சியப் பொருளாதாரம் ஏகாதிபத்திய நாடுகளால் கொண்டு வரப்பட்டு முதலாளித்துவ சுரண்டும் அரசுகள் மக்கள் நல அரசுகளாக மாற்றப்பட்டன. 1991-இல் ரசியா மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் முதலாளித்துவம் மீட்டமைக்கப்பட்ட பிறகு தாராளமயம், தனியார்மயம், உலகமயம் கொண்டு வரப்பட்டு வளர்ச்சியடைந்த ஏகாதிபத்திய நாடுகள் இந்தியா போன்ற பின் தங்கிய நாடுகளிலும் அந்நாடுகளிலுள்ள மக்களின் மீதும் ஒடுக்கமுறையையும், சுரண்டலையும் ஈவிரக்கமின்றி நிகழ்த்துகின்றன.இதற்கு இந்திய ஆளும் வர்க்கங்கள் துணை நிற்கின்றன.

இவ்வொடுக்கு முறைகளுக்கு எதிராக தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் சாதி, மதம் ஆகியன பற்றி உடைமை வர்க்கம் பரப்பிய தப்பெண்ணங்களிலிருந்து விடுபட்டு ஜனநாயகத்திற்கும், சமத்துவதத்திற்கும், சகோதரத்துவத்திற்கும், சுதந்திரத்திற்கும் போராட வேண்டியத் தேவை முன்னுக்கு வந்துள்ளது. இதனைச் சிதைப்பதற்காகவே சாதி வெறியை, மத வெறியை ஆளும் வர்க்கங்கள் தூண்டுகின்றன.

**இந்து மதமா? இராமன் கடவுளா?**

இந்து மதம் என்ற சொல் வேதங்கள், உபநிடதங்கள், கீதை, இதிகாசங்கள், புராணங்கள் போன்ற எதிலும் இல்லை. பாரசீகர்களும், கிரேக்கர்களும் வடமேற்கு இந்தியப் பகுதிகளை சிந்து நாடு என்றனர். புவியியல் அடிப்படையிலான இப்பெயர் இந்து நாடு எனத் திரிந்தது. 1881-இல் ஆங்கிலேயர்களால் முதல் மக்கள் தொகை கணக்கு எடுக்கப்பட்டபோது இந்து என்ற சொல்





நடைமுறை ஏற்பையும், 1950 இல் சட்டத்தில் இச்சொல் அரசியல் ஏற்பையும் பெற்றது.

ஒரு மதம் என்பது ஒரு முழு முதற்கடவுளையும், குறிபிட்ட வழிபாட்டு நெறிகளையும், குறிக்கோள்களையும் கொண்டிருக்க வேண்டும். இந்து மதத்திற்கு இவை ஏதும் இல்லை. சொல்லப்படும் இந்து மதத்திற்குள் வேதத்திற்கு அல்லது பார்ப்பனியத்திற்கு எதிராக உருவான லிங்காயத்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள் இடம் பெற்றுள்ளனர். நான்கு வர்ணங்களுக்கு வெளியே (Out Caste) இருந்த பஞ்சமர்கள், பழங்குடிகள் இந்துக்களாக இடம் பெற்றுள்ளனர். வேதங்களுக்கு எதிரான ஆதமங்களைக் கொண்ட சைவர்கள், வைணவர்கள் இந்துக்களாக இடம் பெற்றுள்ளனர். உருவான வழிபாட்டை மறுக்கிற வேதத்தை மட்டுமே நம்புகிற ஸ்மார்த்தர்கள் இந்து மதத்தில் இடம் பெற்றுள்ளனர். இவைகளுக்கு முற்றிலும் தொடர்பில்லாத நூற்றுக்கணக்கான சிறு தெய்வ வழிபாட்டைக் கொண்ட அம்மனை, மாடனை, அய்யனை, கருப்பனை, காடனை, முருகானை வழிபடுகின்ற பெரும் மக்கள் திரள் கூட்டத்தையும் இந்துக்கள் என்கிறோம். ஒன்றும் அறியா அப்பாவி மக்களை விட்டு விடுவோம். பல்வேறு முரண்பட்ட ஆன்மீக மெய்யியல் கண்ணோட்டம் கொண்டவர்கள் எப்படி இந்துக்களாக இருக்க முடிகிறது. இதில் துளியும் ஆன்மீக - மெய்யியல் நோக்கம் இல்லை என்பது வெளிப்படையானது. பிழைப்பதற்கான அரசியல் தந்திரம் மட்டுமே உள்ளது. ‘முஸ்லீம்களையும், கிறித்துவர்களையும் விட எங்களுக்கு எண்ணிக்கை அதிகம். எனவே எங்களுக்குத்தான் அரசாங்கப் பணிகளிலும், அதிகார மையங்களிலும் அதிக இடம் வேண்டும்'' என்பதற்காக பார்ப்பன-பனியாக் கூட்டம் இதனைச் செய்துள்ளது. இந்துக்களின் பெயரால் எல்லா அதிகார மையங்களிலும் பார்ப்பனிய மேலாண்மையே நிலவுகிறது.

இவ்வாறாக அரசியல் வழியிலும், ஆன்மீக வழியிலும் இப்பார்ப்பனியக் கூட்டம் அப்பாவி மக்களை ஏய்த்து பிழைக்கிறது. இந்து மதம் தொடர்பாக சங்கராச்சாரியார் சந்திரசேகரேந்திர சரசுவதியின் கூற்றொன்றைத் தருகிறேன்.

‘அவன் மட்டும் (வெள்ளைக்காரன் -நாம்) இந்து என்று பெயர் வைத்திருக்கா விட்டால் ஒவ்வொரு ஊரிலும் சைவர், வைணவர், சாக்தர், முருக பக்தர், எல்லை அம்மனைக் கும்பிடுவர் என்று தம்மைப் பிரித்துக்கொண்டு தனித்தனி மதமாக நினைத்துக் கொண்டிருப்போம். சைவர்களுக்கும், வைணவர்களுக்கும் ஒரே சாமி இருக்கிறாரா? இல்லை. வைணவர்களுக்கு சிவன் சாமியே அல்ல. சைவர்களில் தீவிர வாதிகளுக்கு விஷ்ணு சாமியே அல்ல, சிவன்தான் சாமி. விஷ்ணு சிவனுக்கு பக்தன் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் இரண்டு பேரையும் எப்படி ஒரு மதம் என்று சொல்லுவது? வெள்ளைக்காரன் நமக்கு இந்துக்கள் என்று பொதுப்பெயர் வைத்தானோ நாம் பிழைத்தோம். அவன் வைத்த பெயர் நம்மைக் காப்பாற்றியது. (தெய்வத்தின் குரல் முதல் பாகம்). இந்து மதம் ஒரு மதம் இல்லை என்பதற்கு இதைவிட என்ன சான்று தேவைப்படுகிறது?.

இந்து மதம் இப்படி என்றால் இந்து மதக் கடவுளாகக் காட்டும் இராமன் ‘ஒழுக்கங் கெட்டவன்'' என்று வால்மீகியே கூறுகிறார். இராமன் சீதையை மட்டுமல்ல, பல்வேறு நபர்களை மனைவியாகக் கொண்டிருந்தான். மனைவியரை மட்டுமல்ல வைப்பாட்டியர் பலரை கொண்டிருந்தான். போரில் கூட இராமன் வீரனுக்குரிய நேர்மையாளன் இல்லை. நீதிக்குப் புறம்பாக வாலியைக் கொன்று சுக்கீரிவனை ஆட்சியில் வைத்தான். இலங்கையில் இராவணனையும் அவனது மகன் இந்திரஜித்துவையும் கொன்று விட்டு இராவணனுடைய தம்பி விபீஷணனை ஆட்சியில் வைத்தான். இலங்கையில் சீதை தீயில் இறங்கி தனது கற்பை நிலைநாட்டிய போதும், மீண்டும் அயோத்தியில் தனது கற்பை நிலைநாட்ட வேண்டும் என சீதையைக்

கட்டாயப்படுத்தினான். காட்டுமிராண்டித்தனமானவனை விட கேவலமாய் நடந்து கொண்ட இராமனோடு மனைவியாய் திரும்பப் போவதைக் காட்டிலும், சீதை மரணத்தையே ஏற்றுக்கொண்டாள். சீதையை சதித்தனமாக கொல்ல திட்டமிட்டிருந்தான். பரதனுக்குப் பிறகு இராமன் அயோத்தியில் முடிசூடிக்கொண்ட பிறகு கூட நிர்வாகத்தை பரதனே கவனித்து வந்தான். இராமனோ அசோகவனத்தின் அந்தப்புரத்தில் மது அருந்தியும், மாமிசம் உண்டும், அழகிகளுடன் கும்மாளமிட்டான். நாட்டின் நடப்புகளை அவன் கேட்டதே கிடையாது. ஒரே ஒரு முறை மட்டும் பிராமணனின் கோரிக்கையை ஏற்று சூத்திரன் சம்பூகனின் தலையை வெட்டினான். இவர்தான் இந்து மதத்தின் கடவுளாம். பாபர் மசூதியை இடித்த பார்ப்பனிய கூட்டம் 'மிகவும் ஒழுக்கங்கெட்ட அரசன் இராமன்'' என வால்மீகி முனிவர் கூறியபோதும் இராமனுக்கு கோவில் கட்டுகின்றனர். வால்மீகி இராமாயணம் தான் மூலம். பௌத்த இராமயணத்தில் இராமனும், சீதையும் அண்ணன் தங்கைகள். ஒவ்வொரு தேசிய இனத்தின் பண்பாட்டிற்கு ஏற்ப இராமாயணம் திரித்து எழுதப்பட்டு உழைக்கும் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

இந்தியா முழுமையிலும் இந்தப் பார்ப்பனியக் கூட்டம் மக்களை ஏய்த்துப் பிழைக்க பல்வேறு கட்டுக்கதைகளை இட்டுக்கட்டி எழுதியுள்ளது. இந்தப் புளுகு மூட்டையிலிருந்து தமிழ்நாட்டு உழைக்கும் மக்கள் மீண்டெழவேண்டும்.

இறையூர் - வேங்கை வயல் குடிநீர்த் தொட்டியில் மலம் கலந்தது முத்தையாக் கும்பல் எனத் தெளிவாகத் தெரிந்த போதும், புதுக்கோட்டை காவல் துறையோ, சி.பி.சி.ஐ.டி-யோ முத்தையாவை கைது செய்யாததற்குக் காரணம் சாதி, மத மோதலை உருவாக்கும் நோக்கம் கொண்ட அரசியலே! இதுதான் குஜராத்-திராவிட மாடல் அரசியல்? **குஜராத் மாடல் மதவெறியையும், திராவிட மாடல் சாதி வெறியையும் அடிப்படையாக கொண்டுள்ளன.**

**துணை நின்ற நூற்பட்டியல்**


1. தமிழகத்தில் அடிமைமுறை - ஆ.சிவசுப்ரமணியன், கலைச்சுவடு வெளியீடு : மார்ச் 2007.

2. தலித் மக்கள் மீதான வன்முறை - ஆங்கிலத்தில் எஸ்.விஸ்வநாதன் தமிழில் த.நீதிராஜன், வெளியீடு - சவுத்விஷன் புக்ஸ் -2015.

3. வெண்மணி படுகொலைகள் - முனைவர் செ.த.சுமதி - அலைகள் வெளியீட்டகம் - 2015.

4. ஆசிரியர்கள் வந்தேறிகள் தான் - வெளியீடு, கீழைக்காற்று - 2017.

5. இந்துமாக்கடல் மர்மங்கள், தமிழில் - ஆர். பார்த்தசாரதி NCBH - வெளியீடு -2005.

6. இந்திய இழிவு - அருந்ததிராய் தமிழில் - நலங்கிள்ளி - ஈரோடை வெளியீடு - 2018

7. உருவாகாத இந்தியத் தேசியமும், உருவான இந்துப் பாசிசமும் - பழ.நெடுமாறன், வெளியீடு - தமிழ்க்குலம் பதிப்பகம் - 2006.

8. பரமக்குடி துப்பாக்கிச் சூடு, வெளியீடு : மனித உரிமைப் பாதுகாப்பு மையம் - 2011.

9. பரமக்குடிகளின் அரசியல்- வெளியீடு, தமிழ்நாடு மக்கள் கட்சி - 2012.

10.தலித் மக்கள் மீதான தாக்குதல், வெளியீடு : மனித உடணீமைப் பாதுகாப்பு மையம் - 2012.

11.வெண்மணி ஒரு காலத்தின் பதிவு, மைதிலி சிவராமன், வெளியீடு: பாரதி புத்தகாலயம்-2006.

12.வாச்சாத்தி வன்கொடுமை வழக்கும் தீர்ப்பும்- பெ.சண்முகம், வெளியீடு : இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), தமிழ்நாடு மாநிலக் குழு-2011.

13.இந்து மதமே பார்ப்பனியம்! பார்ப்பனியமே இந்து மதம்! அண்ணல் பி.ஆர்.அம்பேத்கர். தமிழில் வெளியீடு : பகத்சிங் மக்கள் சங்கம்-2018.

14.தோள் சீலைப் புரட்சி: ஒரு மனித உரிமைப் போராட்டம்- கண. குறிஞ்சி இந்துத் தமிழ் நாளிதழ் மார்ச்-6-2023.

15.பார்ப்பனியத்தின் வெற்றி-அண்ணல் பி.ஆர்.அம்பேத்கர்.

16.புதிய தொழிலாளர் விரோதச் சட்டங்களும் அதிகரிக்கும் தொழிலாளர்கள் மீதான நெருக்கடிகளும் - குமணன், ஓசூர் தொழிற்சங்கம் - 2020.

17.நாம் இந்துக்கள் அல்ல - பௌத்தர்கள், ஏ.பி வள்ளிநாயகம் வெளியீடு ஜீவசகாப்தன் பதிப்பகம் - 2001.

கடந்த ஜனவரி 25ஆம் நாளன்று மொழிப்போர் ஈகியர்களுக்கு வீரவணக்கம் தமிழ்நாடு முழுவதும் தமிழ் உணர்வார்களால் செலுத்தப் பட்டது. சென்னை மூலக்கொத்தளம் இடுகாட்டில் அமைந் துள்ள ஈகியர் நடராசன் – தாளமுத்து ஆகியோரின் நினைவிடத்தில் தமிழ்த் தேச இறை யான்மைத் தோழர்கள் ஈகியர்களின் நினைவைப் போற்றி முழக்கமிட்டு வீரவணக்கம் செலுத்தினர்.







2023 ஜனவரி 30 சங்பரிவாரங்கள் காந்தியை படுகொலை செய்யப் பட்டதை நினைவு கூர்ந்து காவி பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணி சார்பில் நடத்தப்பட்டது. இதன் ஒரு பகுதியாக சென்னை தாம்பரத்தில் பொதுக்கூட்டம் நடந்தது. அதில் தமிழ்த் தேச இறையாண்மை சார்பில் பொருளாளர் தோழர் கரு.மாரியப்பன்.

2023 மார்ச் 18 பாரீஸ் கம்யூன் எழுச்சி நாளில் வாணியம்பாடியில் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிய அபுநாசர் நிர்வா கத்தை கண்டித்தும், அவர்களை மீண்டும் பணியில் சேர்க்க வலியுறுத்தியும் தொழிலாளர்களின் தொழிற்சட்டப்படி நிலைநிறுத்தப் பட்டுள்ள இழப்பீடுகளை மறுக்கும் நிறுவனங்கள் சட்டம், 2013 நொடிப்புநிலை மற்றும் நொடிப்புநிலை நடைமுறை சட்டம், 2016 நிதிச்சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு சட்டம், 2002 ஆகியவைகளை திரும்பப்பெற வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் தமிழ் நாடு தொழிற்சங்கம் நடுவம் சார்பில் நடைபெற்றது. இதற்கு அதன் பொதுச் செயலாளர் தோழர் ரூபன் தலைமை தாங்கினார்.






2023 ஜனவரி 11–ஆம் நாள் வேங்கைவயல் குடிநீர்த் தொட்டியில் மலம் கலந்ததைக் கண்டித்து பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணி புதுக்கோட்டையில் நடந்த பொதுக்கூட்டத்தில் த.தே.இ. பங்கேற்றது.






2023 ஜனவரி 28-ஆம் நாள் தமுக்கம் மைதான அரங்கின் பெயரை சங்கரதாஸ் சுவாமிகள் பெயரை வைக்கக் கோரியும், தமிழ்நாட்டின் எல்லையை பறிக்கும் கேரள அரசைக் கண்டித்தும், நில உரிமைப் போராளி நீதிபதி ராமதாசை விடுதலை செய்யக்கோரியும், வேங்கை வயலுக்கு நீதிக்கேட்டும் மதுரையில் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் ஆர்ப்பாட்டத்தில் த.தே.இ. பங்கேற்றது.

2023 ஜனவரி 19-ஆம் நாள் கே.ஆர். இந்திராணி கல்குவாரி கருத்துக் கணிப்புக் கூட்டத்தில் "கல்குவாரி அமைப்பதை எதிர்த்தும், குகை ஓவியங்களை பாதுகாக்க வேண்டியும்" அன்னவாசலில் த.தே.இ. வலியுறுத்தியது.







2023 பிப்ரவரி 12-ம் நாள் புதுக்கோட்டை நகர் மன்றத்தில் " தமிழ்நாடு பாரம்பரிய நாட்டுப்புற கலைஞர்கள் நலச்சங்கம்" கோரிக்கை மாநாடு ஆண்டு விழாவில் த.தே.இ. பங்கேற்றது.

2023 பிப்ரவரி 18 மற்றும் 25- ஆம் நாட்களில் புதுக்கோட்டையில் வடவர் ஆதிக்க எதிப்புக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. வெளிமாநிலத்தவருக்கு உள் அனுமதிச் சீட்டு வழங்க வேண்டும். அவர்களுக்கு நிலம், இடம், வீடு வாடகைக்கோ விற்பனைக்கோ இனியாரும் கொடுக்கக் கூடாது. மேலும் அவர்களைப் பற்றியான விவரங்களை மாவட்ட ஆட்சியர் ஆவணப்படுத்த வேண்டும். அவர்கள் மீது கண்காணிப்பு செலுத்த வேண்டும் உள்ளிட்ட பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து முடிவு மேற்கொள்ளப்பட்டது. இதில் த.தே.இ. பங்கேற்றது.

